உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 30 | விரோதிகிருது - ஆவணி – 10—9—71 | இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

மூல முதற் கரு

ஒரு பொருளின் தோற்றத்திற்கு அடிப்படையான பொருளை 'மூலப் பொருள்' என்றும், 'முதற் பொருள்' என்றும், 'கரு' என்றும் கூறலாம். எப்படிக் கூறினாலும் ஒன்றே. அஃதாவது, 'மூலம், முதல், கரு' என்னும் மூன்று சொற்களும் ஒரு பொருளையே தருவனவாம். ஆயினும், சுந்தர மூர்த்தி நாயனார் ஓரிடத்தில் இறைவனை, "மூல முதற் கரு" என்று கூறியுள்ளார்.

மாவை யுரித்ததள்கொண் டங்க மணிந்தவனை
வஞ்சர் மனத்திறையும் நெஞ்சணு காதவனை
மூவ ருருத்தனதாம் மூல முதற்கருவை
மூசிடு மால்விடையின் பாகனை ஆகமுறப்

பாவக மின்றிமெய்யே பற்று மவர்க்கமுதைப்
பால்நறு நெய்தயிர்ஐந் தாடு பரம்பரனைக்
காவல் எனக்கிறையென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

ஏன் அவர் இவ்வாறு ஒரு பொருளைக் குறிக்கும் மூன்று சொற்களையும் ஒருங்கே ஓரிடத்திலே எடுத்துக் கூற வேண்டும் ? ஒரு பொருளைக் குறிக்க ஒரு சொல்லிற்குமேல் மற்றொரு சொல் சேர்ப்பதையே புலவர்கள் அனுமதிக்க விரும்புவதில்லை. அவ்வாறிருக்கும்பொழுது மூன்று சொற்களை ஒருங்கே ஏன் பயன்படுத்துதல் வேண்டும் ?

ஒரே பொருளில் ஒன்றுக்குமேல் இரண்டாவது சொல் வருதலை விரும்பாத புலவர்கள், இரண்டாவதாக வரும் சொல்லையாவது, 'ஒரு பொருட் பன்மொழி ' என்றும், 'மீமிசைச் சொல்' என்றும் ஒருவாறு தழுவிக்கொள்வர்; ஆயினும், 'மூன்றுவதாக மற்றொரு சொல் வருவதை அவர்கள் ஏற்றுக் கொள்வதே இல்லை' என்பதைத் தொல்காப்பியர், "ஒருபொருள் இருசொல்" என்றே சூத்திரம் செய்தமையால் அறிகின்றோம்.

ஒருபொருட் பன்மொழியாக - அல்லது மீமிசைச் சொல்லாக ஒரு பொருளில் இரண்டு சொல் வருமாயின், அவ்விடத்தில் அப் பொருட்கு மிகுதி கொள்ளல் வேண்டும் என்பார்கள். ஒரு கூட்டத்தை, 'பெருங் கூட்டம்' என்று மட்டும் கூறாமல், 'மாபெருங் கூட்டம்' என்று கூறினால், 'மிகப் பெருங் கூட்டம்' என்பது பொருளாகின்றது. ஒரு குழந்தையை 'இளங் குழந்தை' என்று மட்டும் கூறாமல், 'பச்சிளங் குழந்தை' என்று கூறினால், 'மிகவும் இளைய குழந்தை' என்பது பொருளாகின்றது. இங்கு பசுமை இளமையையே குறிக்கின்றது. ஒரு மலையை 'ஓங்கு மலை' என்று மட்டும் கூறாமல், 'உயர்ந்தோங்கு மலை' என்று கூறினால், 'மிகவும் உயரமான மலை' என்பது பொருளாகின்றது. எனவே, ஒருபொருளைச் சொல்லுவோர் அது பற்றிய மிகுதி உணர்ச்சி தோன்றுமாயின், அதனை வெளியிடுவதற்கு இவ்வொரு பொருட் பன்மொழி வழக்கம் பயன்படுதல் தெளிவாகின்றது. ஆயினும், 'இஃது அதற்குப் பயன்படவில்லை; சொல்லழகு

மாத்திரமாய்ச் செவிக்கு இனிமை பயக்கின்ற அவ்வளவே இதன் பயன்' என்று வாதிடுகின்றார், நன்னூலுக்கு விருத்தியுரை செய்த சங்கர நமச்சிவாயப் புலவர். எனினும், மேற் கண்டவாறு 'மா பெருங் கூட்டம், உயர்ந்தோங்கு மலை' என்றாற்போல ஒருபொருட் பன்மொழிகளைக் கூறுமிடத்தில் ஓர் உணர்ச்சிப் பெருக்கு இருத்தலை நாம் காணவே செய் கின்றோம். ஆகவே, சுந்தரர், 'சொற்களை மிகைபடக் கூறுதல் கூடாது' எனத் தமக்கே இயல்பாய் உள்ள கொள்கையையும் விடுத்து, அக்கொள்கையினின்றும் சிறிது வழுவினாலும் முகத்தை வேறொரு பக்கமாகத் திருப்பிக் கொள்கின்ற புலவர் உலகத்தையும் திரும்பிப் பாராமல், இரண்டு சொற்களுக்குமேல், மூன்றாவது சொல்லையும் ஒரு பொருளிலே பெய்து கூறினார் என்றால், 'அஃது அவர்க்குத் தம்மையும் மறந்து நிற்கின்ற ஓர் உணர்ச்சிப் பெருக்கினாலேதான்' என்றே நாம் முடிவு கூறவேண்டி உள்ளது.

அஃதாவது, ஒரு பொருளுக்கு, 'மூலம்' எனப்படுகின்ற பொருள் தான் மூலப் பொருளாகவே இல்லாமல், தனக்கு ஒரு மூலப் பொருளை உடையதாய் இருத்தலும் உண்டு. இனி அந்த மூலப் பொருட்கும் மற்றொரு மூலப் பொருள் இருத்தல் கூடும். எடுத்துக்காட்டாக, ஆடைக்கு மூலப் பொருளாய் இருப்பது நூல். ஆயினும் நூலுக்குப் பஞ்சும், பஞ்சிற்குப் பருத்தியும் மூலப் பொருளாய் இருத்தலைக் காண்கின்றோம்.

இனி ஒரு பொருட்கு மூலப் பொருளாய் இருப்பது மற்றொரு பொருட்கு மூலப் பொருளாய் இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, ஆடைக்கு மூலப் பொருளாய் உள்ள நூல், குடத்திற்கு மூலப் பொருளாதல் இல்லை. மண்ணே குடத்திற்கு மூலப் பொருளாகும். இவ்வாறே குடத்திற்கு மூலப் பொருளாகின்ற மண் ஆடைக்கு மூலமாதல் இல்லை; அதற்கு மூலமாவது நூலே. இவ்வாறே பிற பிற பொருள்களையும் பார்த்துக் கொள்ளலாம். அப்படிப் பார்க்கும்பொழுது, 'மூலப் பொருள்கள்' என்று பெயரளவிற்கு எத்தனையோ பொருள்களைக் கூறலாம். இவ்வாறின்றி எல்லாப் பொருட்கும் தான் ஒன்றே மூலமாய்த் தனக்கு ஒரு மூலம் இல்லாததாய் ஒரு பொருள் இருக்குமானால், அதன் சிறப்பை என்னென்று சொல்வது! அதன் நிலை வியத்தொறும், வியத்தொறும்

வியப்பிறந்து நிற்குமன்றே! அத்தகைய அளவிலா வியப் புணர்வின் மேலீட்டினலேயே சுந்தரர் எல்லாவற்றையும் மறந்து 'மூல முதற் கரு' என்று மூன்று சொற்களை ஒரே வழியாக அடுக்கிக் கூறினர்.

நாம் காண்கின்ற அனைத்துப் பொருள்களும், 'அறிவுடையனவும், அறிவில்லனவும்' என்னும் இருவகையினவாம். அவற்றுள் அறிவில்லனவாகிய பொருள்களின் மூலத்தைத் துருவி நோக்கும்பொழுது ஒன்றிற்கு மற்றென்று மூலமாய், அதற்கு வேறென்று மூலமாய் முடிவாக நிற்பது 'மாயை' என்பது. இதனை, 'கரு' என்று கூறலாம். இனி அறிவில்லாத கருவாகிய பிண்டம் வளர்ச்சியடைவது அறிவுடையதாகிய உயிரின் சேர்க்கையாலேயாம். ஆகவே, உயிர்களைக் கருவிற்கும் மூலமான 'முதற் கரு' எனலாம். இனி அறிவுடையதாகிய உயிரும் அறிவித்தாலன்றித் தானே அறியமாட்டாது. ஆகையால் அவ்வுயிர்க்கு உயிராய் அதனுள் நின்று அறிவிக்கின்ற இறைவன் 'மூல முதற் கரு' ஆகின்ருன். இந்நிலையை உபநிடதங்கள் 'விசுவாந்தரியாமி' (உலகத்திற்கு உள்ளீடாய் நிற்பவன்) எனக் கூறும். எனவே 'மூல முதற் கருவாகிய இறைவன் இல்லாமல் முதற் கருவாகிய உயிர்கள் இயங்குமாறு இல்லை' என்பதும், முதற் கருவாகிய உயிர்கள் இல்லாமல் கருவாகிய மாயை இயங்குமாறு இல்லை என்பதும் அறியப்படுதலால், 'எல்லா வகையான இயக்கத்திற்கும் மூல முதற் கருவாகிய இறைவனது திருவுளப் பாங்கே காரணம்' என்பது விளங்கும்.

இறைவனே எல்லாப் பொருள்கட்கும் மூல முதற்கருவாய் உள்ளான் என்பதை உலகத்தார்க்கு இனிது விளங்கச்செய்த நிகழ்ச்சிகள் இரண்டு. ஒன்று மிகப் பழைய காலத்தில் (துவாபர யுகத்தில் என்பர்) நிகழ்ந்தது; மற்றென்று அண்மையில் மாணிக்கவாசகர் காலத்தில் நிகழ்ந்தது.

மிகப் பழைய காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி, அருச்சுனனை மூகாசுரனிடமிருந்து காத்தற் பொருட்டுச் சிவபெருமான் வேடனாகச் சென்று ஒரு திருவிளையாடலால் அவனோடு போர் புரிந்தபொழுது அவன் அப்பெருமானை வில்லால் அடித்த அடி, அண்ட சராசரங்களாகிய அனைத்துயிர்க்கும் பட்டது.

அதனை வில்லிபுத்தூர் ஆழ்வாரே தமது பாரதத்தில் மிக அழகாகப் பாடியுள்ளார்.

விண்ணில்உறை வானவரில் யார்அடி படாதவர் ?
 விரிஞ்சன் அரியே முதலினோர் ;
மண்ணில்உறை மானவரில் யார் அடி படாதவர் ?
 மனுக்கள் முதலோர்கள் ; அதலக்
கண்ணில்உறை நாகர்களில் யார் அடிபடாதவர்கள் ?
 கட்செவி மகீபன் முதலோர் ;
எண்ணில்பல யோனிதொறும் யா அடிபடாதன ?
 இருந்துழி இருந்துழியரோ.

வேதம் அடியுண்டன ; விரிந்தபல ஆகம
 விதங்கள் அடியுண்டன ; ஒரைம்
பூதம் அடியுண்டன ; விநாழிகை முதற்புகல்செய்
 பொழுதொடு சலிப்பில் பொருளின்
பேதம் அடியுண்டன ; பிறப்பிலி இறப்பிலி
 பிறங்கல் அரசன்றன் மகளார்
நாதன் அமலன் சமர வேடவடிவங்கொடு
 நரன்கை அடியுண்ட அளவே.

இவை அப்பாடல்கள்.

இனி மாணிக்கவாசகர் காலத்தில் சிவபெருமான் அவர் பொருட்டு வைகையாற்றில் பெருவெள்ளம் வரச்செய்த பொழுது பாண்டியன் கட்டளைப்படி அனைத்துக் குடிமக்களும் போல மதுரையில் பிட்டு விற்றுப் பிழைப்பவளாய், யாரும் துணையற்றவளாய், ஆனால் ஆலவாய்ப் பெருமானிடம் அளவற்ற அன்புடையவளாய் உள்ள பெருமூதாட்டியாகிய 'வந்தி' என்பவளும் வைகைக் கரையில் தனக்குரிய பங்கை அடைக்க நேர்ந்தபொழுது அதனைச் செய்யமாட்டாது வருந்திய அவளுக்காக அப்பெருமான் தானே கூலியாளாகச் சென்று, அவள் தந்த பிட்டினையே கூலியாகப் பெற்று உண்டு மண்சுமந்து வேலைசெய்தபொழுது பாண்டியன் அவரைப் பிரம்பால் அடித்த அடி அனைத்துலகத்துள்ள உயிர்கள்மேலும் பட்டது. அதனைப் பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடற் புராணத்தில் அழகுற விரித்தார்.

பாண்டியன் முதுகில் பட்டது ; செழியன்
பன்னியர் உடம்பினில் பட்ட(து ;)
ஆண்டகை அமைச்சர் மேனிமேல் பட்ட(து ;)
அரசிளங் குமரர்மேல் பட்ட(து ;)
ஈண்டிய கழற்கால் வீரர்மேல் பட்ட(து ;)
இவுளிமேல் பட்டது ; பருமம்
பூண்ட யானையின்மேல் பட்ட(து) எவ்வுயிர்க்கும்
போதநா யகன்அடித் தழும்பு.

இது முதலாக நான்கு பாடல்களில் இந் நிகழ்ச்சியை விரிவாக அவர் விளக்கினர். இவ் இருபெரு நிகழ்ச்சிகளும் சிவபெருமான் உலகிற்கு மூல முதற் கருவாய் நிற்றலை இனிது விளக்கிநிற்கின்றன அன்றோ! இவற்றுள், மாணிக்கவாசகர்,

"மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்"

என்று அருமைபெறப் பாடி உருகுமாறு, அவர் காலத்தில் நிகழ்ந்த மூல முதற் கருவின் நிகழ்ச்சி மூல நாளோடு தொடர்புடையதாய் இருத்தல் அறிந்து மகிழத் தக்கது. அஃதாவது, மாணிக்கவாசகர் பொருட்டு இறைவன் நரியைப் பரியாக்கிக் கொணர்ந்து பாண்டியனுக்குக் கொடுத்த ஆவணி மூல நாளோடு தொடர்புடையது அப்பெருமான் மண் சுமந்த திருவிளையாடல்.

இறைவன் நரியைப் பரியாக்கியது, மீண்டும் பரியை நரியாகச் செய்தது, மண் சுமந்தது ஆகிய மூன்று திருவிளையாடல்கள் ஆவணி மூலத்தோடு தொடர்புடையன. அதனால் அத்திருநாள், ஆலவாய்ச் சொக்கன் ஆன்மார்த்த மூர்த்தியாய் எழுந்தருளியுள்ள திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தின் சிறப்புக்களில் முதன்மைபெற்றுத் திகழ்கின்றது. இவ்வாதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அருளாட்சி புரிந்துவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிகஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள் ஆவணி மூல விழாவில் ஆண்டுதோறும் பெருமக்கட்குப் பட்டமும் பதக்கமும் தந்து, பொன்னாடைபோர்த்திச் சிறப்பித்தருளுகின்றார்கள். அண்மையில் நிகழ்ந்த இவ் ஆண்டு ஆவணிமூல விழாவில்

திரு. பெரியசாமித் தூரன் அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள், 'செந்தமிழ்க் கலைச்செல்வர்' என்னும் பட்டம் அளித்து ஆசியுரை வழங்கியருளியதும், சென்ற ஆண்டில் 'செந்தமிழ் இலக்கியச் செம்மல்' என்னும் பட்டம்பெற்ற டாக்டர் ந. சஞ்சீவியவர்கள் தமது பாராட்டுரையையும், ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர் பலர்க்குப் பல அறிவுரைகளையும் வழங்கியதும் அன்பர் பலர்க்கும் அக மகிழ்வை அளித்தன.

திரு. தூரன் அவர்கள் தமிழ்மொழிக் கலைக் களஞ்சியத்தைத் தோற்றுவிக்க இளமை முதலே தாம் முயன்று வந்த வரலாற்றையும் இறைவனிடத்தில் சிறப்பாக - முருகனிடத்தில் தமக்குள்ள நம்பிக்கையையும், ஈடுபாட்டினையும் ஓரளவு எடுத்துரைத்த பொழுது, அவர் அடைந்த உணர்ச்சிப் பெருக்கினால் அன்பர்களது உள்ளங்களும் உணர்ச்சியில் ஆழ்ந்தன. திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் தமது கவிதைகளால் செந்தமிழ்க் கலைச்செல்வரைப் பாராட்டியதும், செந்தமிழ்க் கலைச்செல்வர் இயற்றிய முருகன் இசைப்பாடல்கள் சிலவற்றை அவர் தம் திருமகளார் இனிய இசையுடன் பாடியதும் இவ்வாண்டின் சிறப்பு நிகழ்ச்சிகளாய் அமைந்தன.

இவ்வாறு ஆண்டுதோறும் ஆவணி மூல நாளில் செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் இன்றும் பலர்க்குப் பல நலங்களை வழங்கி வருவதை நினைக்கும்பொழுது குருவருட் பெருக்கிலும், திருவருட் பெருக்கிலும் யாவரது உள்ளமும் இனிது ஈடுபடுதல் உறுதியாம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

"This is my first visit to this temple and I have been greatly impressed by the neat and tidy way in which the temple has been maintained."

(Sd.) R. Mallikarjunan,
Uuder Secretary, Ministry of
Steels and Mines,
New Delhi.

22—8—71

குருவருள்

அருள் மரபு

உயிர்களின் பொருட்டாகவே உலகத்தைப் படைத்த இறைவன், உயிர்களை அவ்வுலகத்தில் மரபு வழியாகவே வளர்க்கின்றான். அம்முறையே வித்தும், விளைவுமாகத் தொடர்ந்து வருகின்றது. அஃதாவது நெல் விதைத்தால் நெல்லாகவும், எள் விதைத்தால் எள்ளாகவும், பயறு விதைத்தால் பயறாகவும் விளைவுகள் உண்டாகின்றனவே யன்றி, ஒன்று விதைத்தால் மற்றொன்றாக விளைவு உண்டாவதில்லை. ஓரறிவுயிராகிய தாவரங்களில் மட்டுமன்று; வேறு எவ்வகையான உயிர்களிடத்தும் இம்முறையே காணப்படுகின்றது. அஃதாவது, ஓர் இன உயிரால் அவ்வினத்து உயிரே பெருகி வருகின்றனவன்றி, வேறோர் இன உயிர் பெருகுவதில்லை. இவ்வாறு ஒவ்வோர் இனமும் நிலைபெற்று இருப்பதால் உயிர்கள் தம் வினைக்கீடாகப் புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி இவ்வாறு மாறி மாறிப் பிறந்து, பக்குவம் பெற்று வருகின்றன. இம்முறையைத் திருவள்ளுவர், "வானின்றுலகம் வழங்கி வருதலால்" என்னும் குறளில், "வழங்கி வருதல்" எனக் குறித்தார்.

இனி, 'புல், பூடு, மரம் முதலியவைகளே வேறு இனமாக உருமாற மாறப் புதுப்புது இனங்கள் தோன்றுகின்றன' என்பர் இக்காலத்தார். அத்தகைய இனமாற்றங்கள் எளிதில், அடுத்தடுத்து யாவரும் அறிய நிகழ்வன அல்ல; ஆகவே, அவைகளை 'உயிர்களின் தேவை கருதி இறைவன் படைக்கும் புதுப் படைப்புக்கள்' என்றே கூறுதல்வேண்டும். எவ்வாறாயினும், இறைவன் உயிர்களை வளர்ப்பது மரபு வழியே என்பது புலனாகின்றது.

உயிர்கள் இவ்வாறு புல்லாகிப் பூடாய்ப் பல்வேறு வகையில் பிறந்து வருகின்ற வளர்ச்சிகளை 'உடல் வளர்ச்சி' என்று கூறலாமேயன்றி, 'உயிர் வளர்ச்சி' அல்லது 'ஆன்மீக வளர்ச்சி' எனக் கூறுதற்கில்லை. ஏனெனில், பல்வேறு வகையான பிறப்புக்களாலும் வளர்வது புலன் உணர்வாகிய புற உணர்வேயன்றி, அக உணர்வு அன்று. அஃது 'ஓரறிவுயிர், ஈரறிவுயிர்' என்

பனபோலப் புலன்களின்மேல் வைத்துக் கூறுகின்ற அந்த ஒன்றினாலேயே நன்கறியப்படும்.

'ஐம்புல உணர்வுக்கு மேலாக, ஆறாவது உணர்வு ஒன்று உள்ளது' என்றும், 'அதுவே, மன உணர்வு, அல்லது பகுத்துணர்வு' என்றும், 'அது மக்கட் பிறப்பு ஒன்றிற்குமட்டுமே உள்ளது' என்றும் முன்னோர் கூறினர். அவைகளில், 'பகுத்துணர்வு' என்ற பெயர் இக்காலத்தில் மிகுதியாக எடுத்துச் சொல்லப்படுகின்றது. 'பகுத்துணர்வு என்பது யாது' என்ற வினாவிற்கு, 'நல்லது இது, தீயது இது எனப் பகுத்து அறிவது' என்று விடை கூறுவார்கள். 'இந்த நன்மையும், தீமையும் எவற்றில் உள்ளன' என்று பார்க்குமிடத்து, 'முன்னே கூறிய ஐம்புலன்களில் உள்ளன' என்று கருதிவிடுதல் கூடாது; ஏனெனில், ஐம்புலன்களில் உள்ள நன்மை தீமைகளை அறிந்து, தீயவற்றை ஒழித்து, நல்லவற்றை நுகரும் தன்மை மக்களிடத்தில் மட்டும் இல்லை; எல்லா உயிரினத்திற்கும் உள்ளது.

" சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின் பால் உய்ப்ப தறிவு "

என்னும் திருக்குறளில் திருவள்ளுவர் 'தீது, நன்று' எனக் குறித்தவை, 'ஐம்புலன்களில் சுவையில்லாதது, சுவை உள்ளது' என்பவற்றையே என்று எவரும் கூறத் துணியார். ஆகவே, 'நன்று, தீது' என்பன அறத்தைத் தருவதும், பாவத்தைத் தருவதும் ஆகிய அவற்றையே குறித்தல் வெளிப்படை. ஆகவே, 'பகுத்துணர்வு' என்பது 'அறம் இது, மறம் இது' எனப் பகுத்துணரும் அற உணர்வே என்பது தெளிவு. இதனை வட மொழியில் 'விவேகம்' என்பர். இந்தப் பகுத்துணர்வுதான் மக்களிடத்தில்தவிர, ஏனைய உயிர்களிடத்தில் இல்லை. 'மனிதன்' என்பதற்கு 'மனம் உடையவன்' எனப் பொருள் கூறப்படுவதால், 'மன உணர்வு' என்பதும், இந்த அறவுணர்வேயாகும். இதனை இக்காலத்தில் 'மனச் சாட்சி' என்கின்றனர். திருவள்ளுவரும்,

" தன்நெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும் "

எனக் கூறினர்.

'நல்வழியில் நடப்பது, நடவாதது' என்பன ஒரு பக்கம் இருப்பினும், முதலில், 'நல்லது இது, தீயது இது' என்று அறிந்துகொள்ளுதல் வேண்டும். அந்த அறிவுதான் மக்கட்கே

உரியதாகச் சொல்லப்படுகின்ற ஆருவது அறிவு. 'அஃது ஒருவனுக்கு இருந்தால், அவன் செயலில் தவறுடையன் ஆன பொழுது அதுவே அவனை வருத்தும்' என்பதைத்தான் திருவள்ளுவர் "தன் நெஞ்சே தன்னைச் சுடும்" என்று கூறினர். எனவே, இந்த அறவுணர்வின் வளர்ச்சியே உயிர் வளர்ச்சி அல்லது ஆன்மீக வளர்ச்சியாகும்.

அற உணர்வு; பொதுமையில் பிறப்பிலே அமைவதாயினும், அது சிறப்பாக உருப்பெற்றுப் பயன்தருவது கல்வி கேள்வி களாலேயே ஆம். அஃதாவது, 'நல்லது இது, தீயது இது' என்று உணரும் ஆற்றல் மக்களுக்குப் பிறப்பிலே உள்ளது. ஆயினும், எது நல்லது? எது தீயது? என்று ஆராய்ந்து, 'இதுவே நல்லது, ஏனையது தீயது' என்று முடிவு செய்வது கல்வி கேள்விகளினுலேயன்றி இயலாது. இது பற்றியே திருவள்ளுவர், 'அறிவுடைமை' என்ற அதிகாரத்திற்குமுன், 'கல்வி, கேள்வி' என்னும் அதிகாரங்களை வைத்தார். மேலும், 'கல்லாமை என்ற அதிகாரத்தில்:

" விலங்கொடு மக்கள் அனையர்; இலங்குநூல்
கற்ருரோடு ஏனை யவர் "

என்றும்,

" கல்லாதான் ஒட்பம் கழியநன் ருயினும்
கொள்ளார் அறிவுடை யார் "

என்றும் கூறினர். அஃதாவது, 'கல்வி கேள்விகள் இல்லாமல் ஒருவன் அறவுணர்வு பெற இயலாது; அறஉணர்வு இல்லை யாயின், அவனுக்கும், விலங்கிற்கும் வேற்றுமை இல்லை' என்ருர்.

அற உணர்வைத் தருகின்ற நூல்களை அவர், "இலங்கு நூல்" எனச் சிறப்பித்திருத்தல் கூர்ந்து நோக்கத்தக்கது, அஃதாவது, 'இருளை நீக்கி ஒளியைத் தருகின்ற விளக்குப்போல அமைந்த நூல்' என்கின்ருர். 'இருள், ஒளி' என்பன அறியாமையும், அறிவுமேயாகையால், 'இலங்கு நூல்' என்பது, 'அறியாமை யாகிய குற்றம் இல்லாத நூல்' என்பது பொருளாகின்றது. இத்தகைய நூலை, அறியாமையின்றி அறிவு வடிவான இறைவனே, தான் நேராகவோ, தன் அருள்வழி நிற்கும் அருளாளர் வாயிலாகவோ உலகிற்குத் தருகின்ருன். அந்நூல்கள் 'முதல் நூல்' எனப்படும். அவற்றின் பின் வருகின்ற நூல்கள் பலவும், வழி நூல் சார்பு நூல்களாய், மரபு மாருது வருவன.

" மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும் "

என்பதும்,

" மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை இயல "

என்பதும் தொல்காப்பிய நூற்பாக்கள். இவற்றால், முன்னே கூறிய உடல் வளர்ச்சிக்கு இனமுறை மரபு இருத்தல்போல, உயிர் வளர்ச்சியாகிய ஆன்மீகத்துறை வளர்ச்சிக்கு நூன்முறை மரபு இருத்தல் விளங்கும்.

நூல்கள் பலவும், 'உலகியல் நூல், அருளியல் நூல்' என்று இருவகையினவாம். உலகியல் நூல்கள் அற உணர்வை மட்டுமே வளர்ப்பன. இவற்றின் பயன் இம்மை, மறுமைகளில் ஒக்கல் மக்களொடு ஒருங்கு இயைந்து இனிது வாழும் வாழ்வைப் பெறுதல்.

அருளியல் நூல்கள் அற உணர்வோடு இறை யுணர்வையும் வளர்க்கும். இவற்றின் பயன் மெய்யுணர்ந்து, ஆரா இயற்கை அவா நீங்கி, அவ்வவாவால்வரும் உறவு-பகை, விருப்பு-வெறுப்பு முதலிய அல்லல்கள் யாவும் அற்று, ஆண்டவனது அருள் இன்பத்தில் மூழ்கியிருத்தல். இந்த அருளியல் வளர்ச்சியே உண்மை ஆன்மீக வளர்ச்சியாகும். அற உணர்விற்கே முதல் நூலின் வழி வரும் மரபு வேண்டும் எனின், அதனினும் சிறந்த அருளியலுக்கு அத்தகைய மரபு இன்றியமையாதது என்பது சொல்லத் தேவையில்லையன்றோ !

உலகியற் பயன் பொருட்டு நூன்மரபைத் தருகின்ற இறைவன், அருளியலின் பொருட்டு நூன்மரபேயன்றி உபதேச மரபினையும் வைத்தருளுகின்றான். அந்த உபதேச மரபே 'அருள் மரபு' எனப்படும். தமிழ் நாட்டில் நந்தி மரபு, ஸ்கந்த மரபு முதலிய அருள் மரபுகள் சில இருந்து, உண்மை உபதேசத்தோடு, உண்மை நூல்களையும் அவ்வப்பொழுது தந்து வந்துள்ளன.

திருக்கயிலையில் சீகண்ட பரமசிவன்பால் அருளுபதேசம் பெற்றவர்களுள் நந்தி தேவர் ஒருவர். அவர்பால் உபதேசம் பெற்றவர்கள் எண்மர். அவர்களில் நாம் இன்று சிறப்பாக அறிவது இருவரை. அவர்கள் சனற்குமார முனிவரும், திருமூல தேவரும் ஆவர். இவர்களில் திருமூல தேவரது இயற்பெயர்

தெரிந்திலது. இவர் 'திருமூலர்' எனப் பெயர் பெற்றது, தமது உடம்பை விடுத்து இறந்துபட்ட 'மூலன்' என்னும் ஆயன் உடம்பில், பசுக்களின் துன்பம் நீங்க வேண்டிப் புகுந்து எழுந்த தனுலேயாம். இவர் தமிழ் மொழியில் அருளிச் செய்த சிறந்த அருளியல் நூல் திருமந்திரம். இதனுடன் இவர் ஏழு மாணவர்கட்கு அருள் உபதேசமும் செய்தருளினர். அவர்கள் வழியாக நந்தி மரபில் திருமூலரது கிளை மரபு தமிழ் நாட்டில் நிலவியது. இவைகளை யெல்லாம் திருமூலரே தமது திருமந்திரத்தில் கூறியுள்ளார்.

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னேடு எண்மரு மாமே.

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்,
இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன்,
கந்துருக் காலாங்கி, கஞ்ச மலையனேடு
இந்த எழுவரும் என்வழி யாமே.

இத் திருமந்திரங்களைக் காண்க.

திருமூலர் அருளிய எண்மருள், "நந்திகள் நால்வர்" என்றது, 'சனகர், சனந்தனர், சனுதனர், சனற்குமாரர்' என்பவர்களை. அவர்களுள் சனற்குமாரர் வழியே வந்து விளங்குவது மெய்கண்ட சந்தானம். இதனை,

" போதமிகுத் தோர் தொகுத்த பேதைமைக்கே
பொருந்தினேர் இவர்க்கன்றிக் கதிப்பாற்செல்ல
ஏதுநெறி எனும்அவர்கட் கறிய முன்னுள்
இறைவன்அருள் நந்திதனக் கியம்ப, நந்தி
கோதில்அருட் சனற்குமா ரற்குக் கூறக்
குவலயத்தின் அவ்வழிஎம் குருநாதன் கொண்டு."

என்ற சிவஞான சித்தியினலும்,

" தேவர்பிரான் வளர்கயிலை காவல் பூண்ட
திருநந்தி, அவர்கணத்து ஓர் செல்வர், பாரில்
பாவியசத் தியஞான தரிசனிகள், அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள், பதியா வெண்ணை

மேவியசீர் மெய்கண்ட திறலார், மாறு
வரவுபுகழ் அருள்நந்தி விறலார், செல்வத்
தாவில் அருள் மறைஞான சம்பந்தர் இவர் இச்
சந்தானத்து எமை ஆளும் தன்மை யோரே"

என்னும் சிவப்பிரகாசத்தாலும் நன்கு அறியப்படும்,

சிவப்பிரகாசத்தை அருளிச் செய்த உமாபதி தேவர், மேற் குறித்த மறைஞான சம்பந்தரே தம் ஞானகுரு என்பதையும் அந்நூலிலே தெளிவாகக் கூறியுள்ளார். அவருக்குப்பின் மெய் கண்ட சந்தானம் திருவாவடுதுறை ஆதீனமாகவும், தருமபுர ஆதீன மாகவும் இன்றுகாறும் நின்று நிலவி வருகின்றது. சிலாத முனிவர்தம் புதல்வராயினமை பற்றி, நந்திதேவருக்கு 'சயிலாதி' என்ற பெயர் உளதாயிற்று. அதனுல் நந்தி மரபாகிய மெய் கண்ட சந்தானம் 'சயிலாதி மரபு' எனப்பெறுகின்றது. ஸ்கந்த பரம்பரையாக விளங்கியது சூரியனுர் கோயில் ஆதீனம். மெய் கண்ட தேவர் அருளிச் செய்த சிவஞான போதம், அருள்நந்தி தேவர் அருளிச் செய்த சிவஞான சித்தி, உமாபதி தேவர் அருளிச்செய்த சிவப்பிரகாசம் முதலிய எட்டு நூல்கள் ஆகிய சித்தாந்த சாத்திரங்களும், பின்னர் ஆதீனங்களில் தோன்றிய பண்டார சாத்திரங்களும் சயிலாதி மரபின் அருளியல் நூல் களாகும். இவை போன்ற நூல்களின் வாயிலாகவும், உபதேச வாயிலாகவும் அருள் மரபுகள் ஆன்மீக வளர்ச்சியைத் தந்து வருகின்றன. ஆகவே, ஆன்மீக வளர்ச்சியை விரும்புவோர் இத்தகைய அருள் மரபின் வழிநின்று அருளியலை உணர்ந்து பயன் பெறுவார்களாக.

குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக் கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00.

விலாசம் — நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B. L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

மன வன விலங்கு - அரி, நரி, கரி.

சி. அ.

செம்பிற் களிம்புபோல அனுதியே பற்றியுள்ள மூலமலமாகிய ஆணவமலம் காரணமாக உயிர் பசுத்துவத்தை - பாசத்திற் கட்டுண்டு கிடக்கும் தன்மையை - உடையதாகின்றது. இவ்வுண்மை பலர்க்கு விளங்குதல் அரிதாகும். அதனுல், அற நூல்கள் இதனே, 'மன மாசு' எனக் கூறும். "இருள் சேர் இருவினே" என்றும், "இருள் நீங்கி இன்பம் பயக்கும்" என்றும் 'வினேக்கும்' பிறவித் துன்பத்திற்கும் காரணம் அக இருளாகிய ஆணவ மலமே' எனத் தெளிவுறக் கூறிய திருவள்ளுவர், "மனத்துக்கண் மாசிலன் ஆதல்" என்றதும் இதனையே என்பது தெளிவு.

இப் பசுத்துவத்தை 'மனக்குதிரை' மனக்குரங்கு, மனப்பாறை என்பன முதலாக உருவகம் செய்தல்போல 'மன வனம்' (காடு) என்றும் உருவகம் செய்வர். "காராரும் ஆணவக்காட்டைக் களேந்து......நெஞ்சகமான பூமி வெளிகாணத் திருத்தி" என்ருர் தாயுமானவர். இம் முறையில் திருமூலர் மனத்தை ஒரு காடுபோல வைத்துப் பசுத்துவத்தை விளக்குகின்ற ஒரு திருமந்திரம் அழகுற அமைந்துள்ளது.

ஒரு மனமே பல்வேறு வடிவங்களே எடுத்துக்கொண்டு பல்வேறு பெயரைப் பெறுதல் நாம் அறிந்தது. 'கல் மனம், இரும்பு மனம், இளகிய மனம்' என்றெல்லாம் சொல்லுதல் அதற்குப் போதிய சான்ருகும். இனித் திருமூலர் ஒரு நான்கு மனத்தைக் குறிப்பிடுகின்ருர். அவை, 'திகைக்கின்ற மனம், நகைக்கின்ற மனம், அகைக்கின்ற மனம்- பகைக்கின்ற மனம்' என்பன. அவற்றுள் 'திகைக்கின்ற மனம்' என்பது ஒன்றும் அறியாது குழப்பம் உற்று நிற்கின்றமனம். இது சைவசித்தாந்தத்தில் 'புருட தத்துவம்' எனக் கூறப்படுகின்ற நிலே. உயிர் 'காலம், நியதி, கலே, வித்தை, அராகம்' என்னும் பஞ்ச கஞ்சுகத்தைப் பெற்றபொழுது 'புருடன்' என நிற்குமாயினும், அப்பொழுது 'போத்திருத்துவம்' (வினேப்பயனே நுகர்வோனும் தன்மை) பொதுவாக உண்டாவதன்றிச் சிறப்பாக உண்டாகாமையால், அது திகைக்கும் நிலேயேயாம்.

இனி " நகைக்கின்ற மனம் " என்பது அறிவைப்பெற்றமனம். இதுவே உயிர் பிரகிருதியில் தோன்றும் பஞ்சக்கிலேசத்தோடு கூடிப் போத்திருத்துவத்தைச் சிறப்பு வகையில் பெற்று நிற்கின்ற நிலை.

இதன்பின், 'அகைக்கின்ற மனம்' என்பது, உயிர் சித்தம் முதலிய அந்தக்கரணங்களைப் பெற்றுப் பொருள்களைப் பாகு படுத்தி உணர்கின்ற நிலை. (அகைத்தல் - பாகுபடுத்தல். இனி 'வகைத்தல்' என்றும் கொள்ளலாம்.)

அப்பால், 'பகைக்கின்ற மனம்' என்பது அந்தக்கரணங்களைப் பெற்றுப் பொருள்களைப் பாகுபடுத்தி உணர்கின்ற உயிர், உல கியலில் வீழ்ந்து திருவருளை மறந்து நிற்கின்ற நிலையாம். இந்த நால்வகை நிலைகளையும் திருமூலர் பின்வருமாறு அழகுறக் கூறுவார் :

மனம் என்பது ஒருகாடு. அது நான்கு பகுதியாய் உள்ளது. அதில் திகைப்பைத் தருவதாய் உள்ள இருளடர்ந்த பகுதியில் சிங்கங்கள் மூன்று வாழ்கின்றன. அதன்பின் சூரியன் முதலிய வற்றின் ஒளிகள் சிறிது புகுந்து விளங்குகின்ற பகுதியில் நான்கு நரிக்குட்டிகள் வாழ்கின்றன. அப்பால் பல்வேறு மரங் கள் வகைவகையாய்ப் பாகுபட்டு ஓங்கி நிற்கின்ற பகுதியுள் ஆனைக் கன்றுகள் ஐந்து வாழ்கின்றன. மற்றும் மக்கள் ஒரு வரையும் வாழ ஏற்றுக்கொள்ளாது அச்சத்தைக் கொடுத்து அகற்றுகின்ற ஒரு பகுதியில் மலையும், மடுவும் ஆகிய பெரிய மேடுகளும், பெரிய பள்ளங்களும் நிறைந்து காணப்படுகின்றன. 'இத்தகையதான இக்காட்டைத் திருத்துவது எப்படி' என்பது தான், திருமூலருக்கு உண்டாகிய இரக்கம். அத்திருமந்திரம் பின் வருவது :

திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று:
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு;
வகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைக்கன் றைந்து :
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பால்இரண் டாமே.

சிங்கங்கள் மூன்று, இச்சை, ஞானம், கிரியை. இவை மலத்தின் வழிப்பட்டு நிகழும் நிலைமை நோக்கிச் சிங்கங்களாகக் கூறப் பட்டன. நரிக்குட்டி நான்கு, அந்தக் கரணங்கள் நான்கு. ஆனைக் கன்று ஐந்து, ஐம்புல ஆசைகள். பால் (வகை) இரண்டு, (மேடு பள்ளங்கள்) வெறுப்பு, விருப்புக்கள்

'இத்தகைய காட்டைக் குருவருளையும், திருவருளையும் கருவியாகக் கொண்டே அழித்து நிலத்தைத் திருத்தி ஞானப் பயிர் வளர்த்துச் சிவபோகத்தைப் பெறல் வேண்டும்' என்பது திருமூலர் திருவுளக் கருத்து. அக்கருத்தை உணர்ந்து பயன் பெறுதல் நமது கடமையாகும்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi

"சீர்காழி திருப்பதியை இன்று கயிலைக் குருமணி அவர்கள் அருளால் வந்து தரிசித்தேன். கோயில்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குத் தருமை ஆதீனக் கோயில்களே எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. துப்புரவும் ஒழுங்கும் அமைதியும் பக்தியோடு பூசை நடைபெறுகின்ற விதமும் என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன. சீர்காழியில் மேற்பார்வை நிருவாகம் நடத்துகின்ற சூப்பிரண்டெண்டு அவர்களுடைய கடமை உணர்ச்சியையும் உழைப்பையும் பாராட்டாமல் இருக்க முடியாது. சீர்காழி மிக புனிதமான தலம். இதைவந்து தரிசிக்கும் பக்தகோடிகளுக்கு இங்கு நடைபெறும் முறைகளெல்லாம் பக்திகள் பெருக்குவனவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

2—9—71. (ஒ-ம்.) பெ. தூரன்.

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

இன்று காலையில் ஸ்ரீ வைத்யநாதப்பெருமானையும் அம்பாளையும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமியையும் நன்கு தெரிசித்தோம். திருக்கோயில் எவ்வாறு வைத்திருக்கவேண்டும் என்பதற்கு மற்ற தருமையாதீனக் கோயில்களைப்போலவே இதுவும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. எங்கு தூய்மையும் துப்புரவும் அமைதியும் நிலவுகிறதோ அங்குதான் இறைவனுடைய அருள் துளியை நன்கு காணமுடிகிறது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களுக்கு என் பணிவார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் கோயில் நிர்வாகஸ்தர்கள் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து செயலாற்றுவதையும் கண்டு அவர்களைப் பாராட்டுகின்றேன். வாழி குருவருள்! வாழி! வாழி!

2—9—71: (ஒ-ம்.) பெ. தூரன்.

திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A,

(மலர் 30. இதழ் 9. பக்கம் 475 இன் தொடர்ச்சி)

11. அக்கினி காரியம்

அக்கினி காரியம் - தீ ஓம்புதல்

214 வசையில் விழுப்பொருள் வானும் நிலனுந்
திசையுந் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேத முதலாம்
அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே.

கு-ரை:- வசை-குற்றம். விழுமை-மேன்மை. வசையில் விழுப் பொருள் வானும் நிலனும்என்பது - குற்றமில்லாத மேன்மையான வானத்தில் வாழ்பவரும் நிலத்தில் வாழ்பவரும் என்றபடி. திசையுந் திசைபெறு தேவர் குழாமும் என்பது - திசைகளில் வாழ்பவர் களும் திக்குப் பாலகர்களும் என்றபடி. வேத முதல் அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே என்பது - வேதத்தை முதலாகக் கொண்டு அந்தணர் வேள்வி செய்யின் என்றபடி. அந்தணர்-அறவோர். விசையம் பெருகிய ஆம் என்பது - நலமுறுவர் என்றபடி. பெருகிய என்ற செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம் ஆம் என்ற வினைகொண்டு முடிந்தது.

அந்தணர் வேள்வி இயற்றின் வானவரும் மண்ணவரும் திக்குப் பாலகர்களும் நலமுறுவர் என்பதாம். I

215 ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்
போகதி நாடிப் புறங்கொடுத் துண்ணுவர்
தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாமறி வாலே தலைப்பட்ட வாறே.

கு - ரை :- ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர் என்பது- வேள்வியினைச் செய்யும் அருமையான வேதத்தை ஓதும் அந்தணர் என்றபடி. போகதி - மீண்டும் பிறப்பினைத் தருகின்ற சுவர்க்கம் செல்லும் வழி. போகதி நாடிப் புறங்கொடுத்துண்ணுவர் என்பது - சுவர்க்கத்தை விரும்பி அக்கினி காரியம் செய்தும் தானம் கொடுத்தும் உணவை உட்கொள்வர்என்றபடி. இது பிரவிருத்தி நெறி என்க. தலைப்படுதல் - அறிவைச் சிரசில் செலுத்துதல். தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி என்பது - தங்களுடைய விதியைத் தாங்களே நிச்சயம் செய்யும் மெய்ந்நெறியை உணர்ந்தவர். தாமறி வாலே தலைப்பட்ட வாறே என்பது - தங்களுடைய அறிவைச் சிரசின்மேல் செலுத்தி வாழ்ந்தனர், என்றபடி இது பிறப்பினை நீக்கும் நிவிருத்தி நெறி என்க.

பிரவிருத்தி நிவிருத்திநெறி கூறப்பட்டது. 2

216 அணை துணை அந்தணர் அங்கியுள் அங்கி
அணை துணை வைத்ததின் உட்பொரு ளான
இணை துணை யாமத் தியங்கும் பொழுது
துணையணை யாயதோர் தூய்நெறி யாமே.

கு - ரை :- அணை துணை - பொருந்திய துணை, மனைவி. அங்கியுள் அங்கி - காருகபத்தியம்; ஆண், பெண் சேர்க்கை. அணை துணை அந்தணர் அங்கியுள் அங்கி அணை துணை வைத்து என்பது - இல்லறத்திலுள்ள அந்தணர் புறத்தே ஓம்பும் அக்கினியின் தத்துவத்தை அகத்தே உணர்ந்து மனைவியோடு பொருந்தச்செய்து என்றபடி. இணை துணை-சிவசத்தி. அதின் உட்பொருளான இணை துணை யாமத் தியங்கும் பொழுது என்பது - அதன் உண்மைப் பொருளை உணர்ந்து சிவசத்தியாக எண்ணி யாமத்தில் இக்கிரியைச் செய்வதே என்றபடி. யாமம் - பொழுது புலர்வதற்கு ஆறு நாழிகைக்கு முன்னுள்ள காலம். துணையணை யாய தோர் தூய்நெறி யாமே என்பது - பொருந்துகின்ற துணையான ஒரு மேன்மை நெறியாகும் என்றபடி.

மனைவியோடு பொருந்திச் செய்வது தான் சந்திர மண்டலம் அமைவதற்குரிய உண்மைநெறி என்பதாம். 3

217 போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு
மாதிரண் டாகி மகிழ்ந்துட னேநிற்குந்
தாதிரண் டாகிய தண்ணம் பறவைகள்
வேதிரண் டாகி வெறிக்கின்ற வாறே.

கு - ரை :- போதுஇரண்டு - ஆண் பெண் சேர்க்கை. போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு என்பது - ஆண் பெண் சேர்க்கையை விரும்பி அருளை நினைந்து புரிந்தால் என்றபடி. மாது இரண்டு - குண்டலினி சத்தி சிற்சத்தியாகிய இரண்டு. மாதிரண் டாகி மகிழ்ந்துட னேநிற்கும் என்பது - குண்டலினி விளங்கி மேலேறியும் சிற்சத்தி இருள் நீங்கி ஒளியாயும் விளங்கும் என்றபடி. தாது இரண்டு - சுக்கில சுரோணிதம். தாதிரண் டாகிய தண்ணம் பறவைகள் என்பது - சுக்கில சுரோணிதக் கலப்பால் விளைந்த தண்மையான (ஆணும் பெண்ணுமாகிய) பறவைகள் என்றபடி. சுக்கில சுரோணித வெளிப்பாடு சந்திரன் கீழ்நோக்கின போது ஆதலின் தண்ணம் பறவைகள் என்றது. வேதி - மாற்றம். வேதிரண் டாகி வெறிக்கின்ற வாறே என்பது - மாற்றமடைந்து ஆண் பெண்ணுகி மயக்கத்தை அடைகின்றன என்றபடி. இருவரும் பயனடைவது ஒன்றினுல் தான் என்று உணராது மயங்குகின்றனரே என்று இரங்கிய வாறு.

ஆண் பெண் கூட்டுறவு இறைவனை நினைந்து அமையுமாயின் தெளிவும் உலகை நினைந்து அமையுமாயின் மயக்கமும் உண்டாம் என்பதாம். 4

218 நெய்நின் றெரியும் நெடுஞ்சுடரே சென்று
மைநின் றெரியும் வகையறி வார்கட்கு
மை நின் றவிழ்தரு மத்தின மாம்என்றுஞ்
செய்நின்ற செல்வம் தீயது வாமே.

கு - ரை :- நெய்நின் றெரியும் நெடுஞ்சுடரே சென்று என்பது- ஆண் பெண் கூட்டுறவினுல் உண்டாகும் உணர்வோடு மேலே சென்று என்றபடி. மைநின் றெரியும் வகையறி வார்கட்கு என்பது, புருவமத்தியில் விளங்கும் சுடரின் தன்மையை அறிபவர்க்கு என்றபடி. மைநின் றவிழ்தரு மத்தினமாம் என்பது, மலநீங்குதலாகிய அந்நாள் நன்னுளாம் என்றபடி, என்றுஞ் 'செய்கின்ற தியது வாமே என்பது, எப்போதும் உடலில் நிலைபெற்ற செல்வமாகிய சிவன் அவ் அக்கினியேயாம் என்றபடி.

அக்கினியே செல்வம் என்பதாம். 5

(தொடரும்)

திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 30. இதழ் 9. பக்கம் 479 இன் தொடர்ச்சி)

அரவிந்த மாது மகிழரி விரிஞ்ச னறிவரி தாயசிற் சுடரே !
பரவிந்த மாசு ணமும்புனே வோயுன் பாதமே தஞ்சமைந் துறுஞ்சி
கரவிந்த மாதிர மடக்கியோன் குறளா கவுமருள் புரிந்தவை யாற்றீச்
சுரவிந்த மாநிலத் தெனக்கினி தருள்வாய் தொண்டர்கள் பருகுமா ரமுதே. 14

(சொ - ள்) அரவிந்த(ம்) மாது மகிழ் அரிவிரிஞ்சன் அறிவு அரிதாய சிற்சுடரே - செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் சீதேவி மகிழ்ச்சியுறும் திருமாலும் திசைமுகனும் அடிமுடி தேடியறிய மாட்டாத ஞான ஒளிமயமானவரே, பர - மேலானவரே, இந்து அம் மாசுணமும் புனேவோய் - சந்திரனேயும் கங்கைநீரையும் பாம்பினேயும் சடாமகுடத்தில் தரித்திருப்பவரே! ஐந்து உறும் சிகர - திருவைந்தெழுத்தின் சிகரமாகியவரே! (ஐந்தெழுத் தண்ணலே) மைந்து உறும் சிகர(ம்) விந்தம் அடக்கியோன் - வலிமைமிக்க சிகரங்களேயுடைய (உச்சி) விந்த கிரியின் வீறடக் கிய அகத்தியமாமுனிவரரை, குறளாகவும் அருள்புரிந்த ஐயாற்று ஈச்சுர - குறள்வடிவினராகவும் அருளிச்செய்த திருவையாற்றுத் தேவதேவரே! தொண்டர்கள் பருகும் ஆர் அமுதே - அடியவர்கள் தியானமுறையில் தியானித்து அருந்தும் அரிய தேவாமிர்தமானவரே, இந்த மாநிலத்து உன்பாதமே தஞ்சம் - இறந்து பிறந்துழன்று இருவினைப் பயனுகரும் இந்த உலகத்தினிடத்து தேவரீர், திருவடிகளே பற்றுக்கோடாம் ஆகையால், எனக்கு இனிது அருள்வாய்-அடியற்குப் பேரின்பினைத் தந்தருளுவாய். எ - று.

(கு - ரை) மாதிரம் - மலை. அம் - நீர். மைந்து - வலிமை. குறள் - சிறியவுருவம். அமுது, அமிழ்து, அமிருதம், என்பன ஒருபொருள்.

விந்த கிரியின் வீறடக்கின வரலாறு:- இம்மலையானது எட்டு மலைகளில் ஒன்று. பரதகண்டத்தின் இடையில் உள்ளது. இதனிடம் நாரதர் மேருவின் பெருமைகளைக் கூறினர். இதனால் இம்மலை செருக்கடைந்து விண்ணளவும் ஓங்கியுயர்ந்து சூரியன் முதலானோர் போக்கைத் தடுத்து நிற்கையில் தேவர் அகத்தியரிடம் இதன் வரலாற்றினைக் கூறினர். அதனால் அகத்தியர் விந்த மலையிடம் வர, விந்தம் பணிந்தது. அதனைத் தாம் தென்னாட்டிலிருந்து மீளும் அளவும் மேல் எழாதிருக்கக் கட்டளையிட்டுப் பொதிகையடைந்தனர். விந்தம் செருக்கு ஒழிந்தது. தேவர் களிப்படைந்தனர். (என்பதாம்)

அமுதமே ! யன்பே யருட்பெருங் கடலே யருமறை
முடிவிழுப் பொருளே !
குமுதமே யனவா யரிமதர் நெடுங்கட் கொம்மைவெம்
முலைக்கருங் குழலார்
தமுதமே யளவி லின்பமென் றுழல்வேன் றனைவலி யத்தடுத்
தாண்டாய் !
கமுதமே யவரிச் சடிலவை யாற்றுக் கண்ணுத லேதனி
முதலே. 15

(கொ - ள்) அமுதமே! அன்பே - அன்பின் மயமானவரே, அருள் பெருங்கடலே - அருளாகிய பெரிய கடலே, அருமறை முடி விழுப்பொருளே - அறிதற்கு அரிய வேதசிரசாகிய உபநிடதங்களில் உரைக்கப்பெற்ற சீரிய பொருளே, குமுதமே அன்ன வாய் - செவ்வல்லிப் பூப்போலும் செவந்த உதடுகளையும், அரிமதர் நெடுங்கண் - செவ்வரிகருவரி பரந்த செழித்து நீண்ட கண்களையும், கொம்மை வெம்முலை - அழகிய விரும்பத்தக்க கொங்கைகளையும், கருங்குழலார்தம் - கருமையாகிய கூந்தலினையும் உடைய இளமங்கையர் தம்முடைய, முத்தமே அளவு இல் இன்பம் என்று உழல்வேன்தனை - அவர்களுடன் அளவளாவி யணைந்து முத்தமிட்டுக் கொஞ்சும் செய்கையே பேரின்பமெனக் கொளும் இக்கயவனை, கம் - தலையின்கண், உதம்மேய வரிச் சடில - கங்கைநீர் மேவிய கட்டப்பட்ட செஞ்சடை வானவரே, ஐயாற்றுக்கண் நுதலே - திருவையாற்றின்கண் எழுந்தருளிய நெற்றிக்கண்ணுடையவரே, தனிமுதலே - ஒப்பற்ற ஒருபெருங் கடவுளே, வலிய தடுத்து ஆண்டாய் - வலியவந்து தடுத்து ஆட்கொண்டருளினீர். (எ-று) இதற்கியான் பண்டையிற் செய்த புண்ணியம் யாதே. (என்றபடி)

(கு - ரை) கம்உதம் - நீருண்ட கரியமேகம். உழலல் - வருந்துதல், குமுதம் - அல்லி. கொம்மை - அழகு. தடுத்தாளல் - பிறவிப் பெருங்கடலில் விழ்ந்து வருந்தாவாறு அடிகொள்ளல். அளவு இல் இன்பம் - அளந்தறிய முடியாச்சுகம். அன்ன வென்பது அனவாயிற்று. சடிலம் - சடை.

தலைவணங் கிலைநந் தாளைநா நஞ்சீர் சாற்றிலை நம்புகழ்
செவிகேட்
டிலைவணங் கியினும் பொலிநம துருவ மெண்ணிலை
யென்னென வாண்டாய்
அலைவணங் கிளர்மாலினை கணை ஆக்கி யைந்நதிக்
கடவுளே செம்பொன்
மலைவணங் கிடவும் குனித்துமுப் புரமும் வல்லையி
லெரித்தபே ரொளியே 16

(இ - ள்) அலை வண்ணம் கிளர் மாலினை கணை ஆக்கி - கடல் நிறம்போல விளங்குகின்ற, கரிய திருமாலினை கூரிய அம்பு வாக்கி, செம்பொன் மலை வணங்கிடவும் குனித்து - மகமேரு மலையினை வில்லாக வளையும்படியுப் (செய்து) முப்புரமும் வல்லையில் எரித்த பேர் ஒளியே - திரிபுரத்தையும் விரைவினில் எரித்த பெரிய தீவண்ணரே. ஐந்நதிக் கடவுளே - திருவையாற்றுச் சிவபரம் பொருளே! தேவரீர், இவன், நம்தாளை தலை வணங்கிலை - நம்முடைய திருவடிகளை தலையால் வணங்கிடவும் கிடையாது. நம்சீர் நாசாற்றிலை - நம்முடைய சீரினை நாவினால் நவிறலும் செய்வது இல்லை. நம் புகழ் செவி கேட்டிலை - நம்முடைய புகழினை செவிகளால் கேட்கவும் கிடையாது. இன்னும் - மேலும் (நம்நினைவு வந்து) வணங்கி - பணிந்து; நமது பொலி உருவம் எண்ணிலை - நமது சோதியாக விளங்குகின்ற திருவுருவினை நெஞ்சிலிருத்தி நினைப்பதும் செய்யவில்லை (அங்ஙனமிருக்கவும் காரணமின்றியடியவனை,) என் என ஆண்டாய் - என்ன பயன் கருதி யாண்டருளினீர். இதனைப்பற்றி கூறுதியோ (எ - று)

(கு - ரை) "ஆடுகின்றிலை யன்புடையான்" எனுங் குறிப்புடை திருவாசகத்தினை யொற்றியது போலும்.

"முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடி மேல்முகிழ் வெண் டிங்கள்
வளைத்தானை வல்ல சுரர் புரங்கண் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணுக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறுத்
தூமுத்த வெண் முறுவலுமை யோடாடித்

திளைத்தானைத் தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேனானே"

என்னுந் தாண்டகத்தை யொட்டியுள்ளது இச்செய்யுள் ஆம்.

ஒளிமதிக் கற்றை வார்சடை துலங்க
வுமையொடு விடைமிசைத் தோன்றிக்
களிமதிக் கடையேன் றனைத்தெளி வித்துன்
காட்சிதந் தருளுநா ளென்றோ
அளிமதிக் கவுமுண் டிழிதரு நறவ
மகன்பணை யடையநெல் விளைந்து
தளிமதிக் கனைத்தும் விரிக்கு மையாற்றுத்
தற்பர மானசிற் சுகமே"

(இ - ள்) அளி மதிக்கவும் - வண்டுகள் ஆரவாரஞ்செய்து கொண்டு குடையவும், இழிதருநறவம் - சிதறிவழியும் தேன். உண்டு இழிதருநறவம் - அவ் வண்டுகள் பருகிவழியும் தேன் - (பெருகிப் பாயப்பெறலால்) அகன்பணை அடையநெல்விளைந்து. அகன்ற மருதநிலம் எல்லாம் நெற்கள் விளையப்பெற்று, தளிமம் திக்கு அனைத்தும் - அழகிய திசைகளுக்கெல்லாம், விரிக்கும் - வளம் மிகுதலால் எங்கும் அவ்வளம் விரியப்பெறுகின்ற, ஐயாற்று தற்பரம் ஆன சிற்சுகம் ஏ - திருவையாற்றின்கண் எழுந்தருளியுள்ள மிக மேலான பொருளாம் ஞானநலமாகிய பெருமானே! ஒளிமதி கற்றை வார்சடை துலங்க உமைஒடு விடைமிசைத் தோன்றி - ஒளிபொருந்திய பிறைச்சந்திரனைத் தரித்த தொகுதியாகிய நீண்டசடையானது விளங்க உமையம்மையாருடன் இடப வாகனத்தில் எழுந்தருளி. களிமதி கடையேன் தன்னை - (புலப்படுமாறு) உண்மையறியாத களிப்புடன் கூடிய நல்லறிவு செறியப்பெறுத எளியவன்றனை, தெளிவித்து - அறியாமையினை யகற்றி யறிவுடைமையினைத் தந்து; உன் காட்சிதந்து அருளும் நாள் என்று ஒ - தேவரீருடைய திருவுருவக் காட்சி தந்தருளும் காலம் எப்பொழுதோ அறியகில்லேன். விரைவில் அருள்புரிந்தருளல் வேண்டும் என்பதாம்.

(கு - ரை) இடபவாகனக் காட்சி காணப்பெறுபவர். ஈடில் இன்பம் எய்துவர் என்பது குறிப்பு. உமாமகேசுரவடிவமும் இடபாரூடர் வடிவமும் குறிக்கப்பெற்றுளது. பணை - மருதநிலம். தளிமம் - அழகு, தற்பரம் - அதற்கு மேலானது; ஆன்மாவிற்கு மேலாகிய சிவபெருமான். "தற்பரமாய்ப் பரபதமாய்த் தாவிலநுபூதியதாய்" கோயிற்புராணம். உண்மை, யென்றுமாம். சிற்சுகம் - ஞான நலம். (மோட்ச வடிவு) (தொடரும்)

புறப்பாட்டும் – அறப்பாட்டும்

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி

(மலர் 30. இதழ் 9. பக்கம் 472 இன் தொடர்ச்சி)

நெஞ்சில் வினாக்கள் :

நீர் செல்லும் போக்கில் போகும் தெப்பத்தை, ஊழ் வழிப் பட்ட உயிர்க்கு உவமை கூறுவது எப்படிப் பொருந்தும்; தெப்பம் தன்னுணர்ச்சி அற்றது; தனக்கென்று எவ்வித இயக்கமும், எழுச்சியுமற்றது. தன்னுணர்ச்சியும், உணரும் ஆற்றலும், எதிர் நீச்சலிட்டு எதனையும் வெல்லும் வல்லமையும் படைத்த உயிர்க்கு அவ்வுவமை எங்ஙனம் பொருந்தும். உயிர்கள் தெய்வத்தால் ஆகாது என்பதனையும் ஆக்கிவிட வல்லனவே, ஊழை உப்பக்கம் காணும் உரனுடையனவே! அப்படியிருக்க அறிவற்ற சடமாகிய கட்டை, அறிவுவயப் பட்ட உயிராற்றலை எப்படி உவமையாக நின்று விளக்க முடியும்?

நம்மைப் போலவே பூங்குன்றன் உள்ளத்தும் இவ்வினா எழுகிறது. அதற்கு அமைதிகாட்ட அவர் கையாளும் முறை நிறைவாக்குகிறது. பேசப்படும் உவமை இவ்வினாவிற்கு விடையை உள்ளடக்கிக்கொண்டு எழுகிறது. தண்ணீரின் போக்கில் தெப்பம் நகர்வதுண்டு: ஆனால் ஓர் மனிதன் தண்ணீரின் போக்கை எதிர்த்துச் செல்ல இயலுமே என்பது நம் உள்ளத்து வினா? பூங்குன்றனார் விடையை உவமையால் பேசாது, உவமைக்குப் புணர்க்கும் அடைமொழியில் வைத்துத் தம் நெஞ்சக் கருத்தை விரிப்பது வலிவுடையதாகிறது.

தெப்பத்தை அடித்துப்போவது மெல்லிய போக்குடைய நீரோட்டமன்று; அதன் போக்கு எப்படிப் பட்டது தெரியுமா என்று வினவாக்கிக் கொள்கிறார்; கொண்டு அதற்கு விளக்கம் தருகிறார்.

ஆழ்பொருள் உவமை :

மின்னலும், இடியும் உடைய பெருமழையை மேகம் மலையகத்தின் கண்ணே பொழிகிறது. அக்கருவி மாமழைப் பெரிது பட்டு ஒன்று திரண்டு மலையினின்றும் இழிகிறது. அளவற்ற பெருமழையின் பிறக்கத்தால் இதுவரை அசையாது கிடந்த

மலையகத்துக் குன்றுகளெல்லாம் நீர்ப்பெருக்கின் வேகத்தால் உருண்டு வீழ்கின்றன. வீழ்ந்து பட்ட பெரும் கற்றெகுதிகளை யெல்லாம் உருட்டிக்கொண்டு கதுமெனப் புறப்பட்டு வீறு கொண்டு பாயும் வளமிக்க பேராறு அது. கற்களையே உருட்டி வரும் வளமை மிக்க நீர்ப்போக்கில் மாட்டிய தெப்பக்கட்டை என்னும் என்பது உவமையில் சேர்க்கப்பட்ட அடைமொழியால் விளக்கப்படுகிறது. நீந்தும் வல்லமை பெற்றுரையும் வலிமை இழக்கச்செய்துவிடும் காட்டாற்றின் வலிமையைக் காட்டுவதன் மூலம் விதி என்ற பேராற்றில் மனித முயற்சிகளும், ஆண்மையும் வெல்ல முடியாது ஈர்த்துப் போகப்படுகின்றன என்பது விளங்கித் தோன்றுகின்றது.

சங்காலப் பாடல்களிலே பேசப்பெறும் உவமைகள் பொருள் பொதிந்தன என்பதை அவற்றை இனங்கண்ட நெஞ்சம் உணர் கிறது. 'மற்றென்று சூழினும் தான் முந்துறும்' என்ற வள்ளு வத்தை வலிவாக்க உவமைத்துத் தரப்பட்ட அடை புறப்பாட்டில் வளங் கூட்டி நிற்கிறது. கற்களையும் உருட்டி வரும் ஆறு என்ற கருத்து உயிர்களின் எத்தகு வலிய முயற்சிகளையும் முறியடிக்கும் ஊழ்வலிக்கு வலிமைதர வந்தது.

> "..............................மின்னெடு
> வானந் தண்துளி தலைஇ ஆனது
> கல்பொருது இரங்கும் மல்லல்பேர் யாற்று
> நீர்வழிப் படூஉம் புணை"

என்ற வரிகள் ஆசிரியரின் ஊழ் பற்றிய வலிய எண்ணத்தை விளக்கிநிற்கிறது. 'மின்னெடு' என்பதனலே கருவிமாமழை என்பதூஉம், 'கல்பொருது இரங்கும்' என்பதனலே அதன் வேகமும், 'பேர்யாற்றுநீர்' என்பதனலே அது கரைகடவாது ஓர் போக்குடைய வன்மையதென்பதூஉம், 'மல்லல்யாறு' என்ற தனலே அது விரைவுடையதாயினும், அழிக்கும் இயல்பினதென்ப தில்லை; வளங்கூட்டும் வன்மையுமுடையது என்பதூஉம் விளக்க முறுதல் நுண்ணிதின் உணர்வார்க்குப் புரிகிறது.

எனவே, ஊழிற்பெருவலி ஒன்றுமில்லை என்ற முடிந்த கருத்தை நன்மைக் கூறுபாடமைந்த சான்றேர் நூல்களினலே யாம் அறிந்துகொண்டோம் என்று, தான் காட்டப்போகும் சமுதாய எண்ணங்களுக்கு இதுதான் அடித்தளம் என்பதனைத் தெற்றென முதற்கண் உணர்த்திக்கொள்கிருர். கொள்ளவே, அவர் பேசும் அத்தனை கருத்துக்களும் ஊழ்மேற் கொண்டிருந்த

அவரது அளவற்ற நம்பிக்கையில் பூத்தன என்பதை நாம் நன்கு இனங்கண்டு கொள்கிறோம்.

ஊழ்க்கு மணிமுடி :

'யாதும் ஊரே' என்று தொடங்கும் செழித்த புறப்பாட்டு நம் சிந்தனையில் விரிகிறது. பூங்குன்றனர் உவமையை இடையில் வைத்தாலும் அது மத்திம தீபமாக நின்று பாடல் முழுவதற்கும் ஒளிகாட்டுகிறது.

"நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம்"

என்று தன் நெஞ்சப்பாங்கு கூறி முடித்தவர். 'ஆதலின்' என்ற காரணப்பொருட்டாகிய சொல்லினை முன்னிறுத்திக் கொள்ளுகிறாற்போல் வைத்துக் கருத்து வெளிப்படுத்துகிறார். வாழ்க்கை ஊழ்வழிப்பட்டது. நம்முயற்சியில் ஒன்றுமில்லை. எனவே, அது என் ஊர் – இது என் ஊர் என்ற பாகுபாடோ, இவன் நட்பு அவன் பகை என்ற எண்ணமோ நமக்கு ஏன் என்ற ஊழ்வழிப்பட்ட உள்ளம் 'யாதும் ஊரே – யாவரும் கேளிர்' என்ற எண்ணத்தை உருவாக்குகிறது. அதேநெஞ்சம் நன்மை – தீமை ஒருவரால் வருவதில்லை எனத் தத்துவம் பேசுகிறது: 'கேடும் பெருக்கமும் இல்லல்ல' என்ற திருவள்ளுவர் நினைவில் நிறைகிறார். வருத்தமும் – அதன் தீர்வும் விதியால்; சாக்காடும் விதி வழிப்பட்டது. எனவே, வாழ்தலை விரும்புவதும் இல்லேன்; வெறுப்பதும் இல்லேன்; பெரியோரை வியப்பதுஞ் செய்யேன்; சிறியோரை இகழ்தலுஞ் செய்யேன் என்றெல்லாம் ஊழ்வலிக்குத் தலை வணங்கும் பூங்குன்றன் எண்ணங்களை விரிக்கிறார். சமுதாயத்தில் எல்லாம், எப்போதும், எங்கும் ஊழாலன்றி நிகழ்வதில்லை. எனவே, ஓர் மரக்கட்டைபோல விருப்பு வெறுப்பற்றவனாக வாழ்ந்துபோதல் சால்புடையது என்று ஆசிரியர் குறிப்பாக்குவது தெரிகிறது.

வள்ளுவர் உள்ளம் :

பூங்குன்றன் பேசும் கருத்துக்கள் பெரிதும் வேண்டத்தக்கனவே என்றாலும், அவை அளவிறந்த ஊழ்பற்றிய நம்பிக்கையில் விளைந்தனவேயன்றி, வீறுகொண்ட சமுதாய நல்லுணர்வில் பூத்தனவாகத் தெரியவில்லை. ஊழை வலிமைபடப் பேசினும்

திருவள்ளுவர்க்கு மனித ஆற்றலும் முயற்சியும் அதனை வெல்லவும், இணங்காணவும் வல்லன என்ற நம்பிக்கை இருந்தமை ஆள்வினை யுடைமைபற்றிய அவர் கருத்துக்களால் விளங்குகிறது. சமுதாய அறம் பேசும் பொருட்பாலில், ஒரு சில தனி மனிதர்கள் ஊழ் பெயரில் சோம்பினாலும், ஒரு சமுதாயம் அதைக் காட்டி வாளாவிருத்தல் கூடாது என்ற உறுதிப்பாட்டை அவர் விளக்கத் தவறவில்லை.

சமுதாயத்தை ஒன்றாகவும், மக்களினத்தைச் சொந்தமாகவும் கருதவேண்டும் என்ற கருத்தில் வள்ளுவர்க்கும் அளவிறந்த விருப்பம் இருந்தது. ஆனால், அந்த எண்ணம் ஊழால் பிறப்பதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. பூங்குன்றனுக்கும் ஒருபடி மேலேபோய் தன்னாட்டகத்து ஊர்களைமட்டும் தமதாகக்கொள்வதன்றி, பிற நாடுகளையும் தன்னுடாகக் கருதவேண்டுமென்ற விரிந்த பார்வை இருந்தது. அவர் அதற்குக் காட்டும் வழி மிக்க வலிமைபெற்றுச் சிறக்கிறது.

அன்பின் பகுப்பு :

அன்பினை இரண்டாகப் பேசும் ஒரு புறப்பாட்டு. நாம் பிறர் மேல் செலுத்தும் அன்பு, நம்மீது பிறர் செலுத்தும் அன்பு என அவ்விரண்டனையும் அங்கே காணமுடியும்.

"நின்நயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்"

என்பது அப்புறப்பாட்டு அடி.

எல்லா ஊர்களையும் நமது ஊர் என்று நாம் ஏற்கும்போது அவர்களும் அக்கருத்துக்கு உட்பட்டு, நமது ஊரையும் அவர்களதாக ஏற்றல் வேண்டும். யாவரையும் நாம் கேளிராக ஏற்றால், அவர்களும் நம்மை அங்ஙனம் காணவேண்டும். ஒரு முனையில் மட்டும் இவ்வெண்ணங்கள் இருக்குமானால் அதன் விளைவு விழைந்த பயனைத் தருவதாக அமையாது. விதியின் வலிமையை எண்ணி, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கொள்கை பிறக்குமானால் அது உயர்ந்ததாகலாமேயன்றி உண்மைப் பயன் விளைப்பதாகாது.

குறளோவியம்

அது தெரிந்தே வள்ளுவர் இதே எண்ணத்தை மனித இனம் பெற வேண்டுமென்று எண்ணி அதற்கான ஒழுங்குபட்ட வழிகளைக் காட்டுகிறார். அவர் எண்ணம் இப்படி விரிகிறது.

" யாதானும் நாடாமால் ஊராமால் "

கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பெனக் கண்டு, கல்வியால் அதன்கண் ஒருவன்பெற்ற வன்மையால், பிறநாடும், பிற ஊரும் இவனையும், இவன் நாட்டையும் தமதாகப் பாவித்து நெருங்க, இவன் கற்ற நெஞ்சில் பூத்த, பரந்துபட்ட பண்பாட்டால் அந்நாட்டையும், ஊரையும் தானும் தனதாக எண்ணத் தலைப்படுவான். தலைப்படவே அன்புபூக்க சமுதாயத்தையே ஒன்றாகக் கருதும் பண்பாடு மனித உள்ளத்தில் உருவாகும். 'யாதும் ஊரே' எனக்கருத பூங்குன்றன் 'விதி'யைக் காட்ட, வள்ளுவரோ விளங்கும் கல்விகாட்டுவார். அது விளைக்கும் பயன் உண்மையான தென்பதால்.

அடுத்துவரும் 'யாவரும் கேளிர்' என்ற எண்ணத்திற்கும் புறப்பாட்டு விதியையே அடிப்பாடாக்குகிறது. திருவள்ளுவர் வேறு காரணம் காட்டுகிறார். அறிவுடைமைக்கு இலக்கணங் காட்டுவது போல சமுதாய மக்களைத் தழுவிக்கொள்ள வழி அமைக்கிறார்

'உலகந் தழீஇயது ஒட்பம்'

என்பர். உலகத்தை எல்லாம் நட்பாக்குவது அறிவுடைமை என்பது அவர் நெஞ்சம். இதனை மாற்றிப்பார்த்தால் அறிவால் உலகத்தை நட்பாக்க - உறவாக்க முடியும் என்பது வள்ளுவர் நெஞ்சால் விளங்கித் தோன்றுகிறது. எனவே, அறிவுத் தெளிவால் ஏற்படும் நெஞ்சப் பண்பே உலக மக்களினத்தை உறவாகக் கருதும் உண்மைக்கருத்தை விளக்கும் என்பது விளக்கமுறுகிறது.

எனவே, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற தலைசிறந்த எண்ணம் உயர்ந்ததென்றாலும் அதற்குப் பூங்குன்றனும் வள்ளுவரும் அமைத்துக்கொண்ட அடிப்படை வெவ்வேறு என்பது புரிகிறது. பூங்குன்றனார்க்கு வள்ளுவர் நெஞ்சம் புரியாதென்பதில்லை. எக்கருத்தாயினும் அதனைச் சிறக்க வலியுறுத்த வேண்டுமென்ற சால்புமிக்க உள்ளத்தால் விதியை அவர் வலியுறுத்திப்போகிறார் என அமைதிகாண முடியும்.

எனவே, எண்ணம் எதுவாயினும் அது எதன்மேல் நாட்டப்படுகிறது என்ற அடிப்படையைப் புரிந்துகொள்வது நலம் பயக்கும் என்பது இங்கே விளக்க முறுகிறது.

சிந்தனைத் தொகுதி :

'ஊழிற் பெறவலி யாவுள' என்ற வள்ளுவத்திற்கு விரிவுரையாக அமைவது 'யாதும் ஊரே' என்ற கணியன் பூங்குன்றன் புறப்பாட்டு என்பதும், அது அருமையான தமிழ்ப் பண்பாட்டின் விளக்கமாக அமைந்ததென்பதையும், அத்தொடர்க்குப் புறப்பாட்டிலும் வள்ளுவத்திலும் இடப்பட்டிருக்கும் அடிப்படை வேறுபட்டதென்பதும், புறப்பாட்டு விதியை வலியுறுத்தி நின்று விடுகின்றதென்பதும், வள்ளுவரோ இரு முனைப்பட்ட இவ்வெண்ணங்கள் கல்வியாலும், அறிவாலும் அமைய வேண்டுமென்ற கருத்துடையவராய் இதே பண்பினை வேறு கோணத்தில் வலியுறுத்திச் சிறந்தனர் என்பதுவும் நமதுள்ளத்தே சிந்தனையைத் தொட்டன.

எனவே, கருத்துக்களைக்காட்டிலும் அவை எழுதற்கு, அல்லது அவற்றை நடைமுறைப்படுத்தற்குக் கூறப்படும் அடிப்படைகளை இனங்கண்டு போற்றுதல் அறிவுடைமையும், பயன் தரத்தக்கதும் ஆகும் என்பதைப் புறப்பாட்டினொடு இணைத்து-வள்ளுவர் வழிநின்று கண்டு சிறப்போம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Thiagarajaswamy Devasthanam, Tirukkuvalai.

இன்று (14—8—71) திருக்குவளை ஸ்ரீ தியாகராஜப்பெருமான் ஆலயத்தைத் தரிசிக்கும்பேறு எங்கள் குழுவினருக்குக் கிடைத்தது. ஆலயம் தரிசிக்கவருபவர்களுக்கு அமைதிதரும் நிலையில் சுத்தமாகவும், புனிதமாகவும் பராமரிக்கப்பட்டுவருவதைக்காண மட்டற்ற மகிழ்ச்சி. ஒவ்வொரு அன்பரும் தன்வசம் இழந்து பெருமானை வழிபட்டார்கள். இவ்வளவுக்கும் காரணம் ஆலய அலுவலர்களின் உண்மையான செய்தொண்டாகும் எனக் கருதுகிறேன். இப்பெருமை எங்கள் வழிபாட்டிற்கும் வணக்கத்திற்கும் உரிய தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களையேசாரும். மேலும் இந்நிலையை எப்பொழுதும் ஏற்படுத்த அலுவலர்களுக்குப் பெருமான் நல்லாசி வழங்க எங்கள் குழுவினர் இறைஞ்சுகிறார்கள். நல்லோர் நிலைக்க நலம் பெறுக. எல்லோரும் வாழ்க இசைந்து.

(Sd) K. பழனிவேல்.
அமைப்பாளர்,
தஞ்சைப் பெரியகோயில் வார வழிபாட்டுக்குழு.

சேக்கிழார் காட்டும் நாடுகளும் ஊர்களும்

செஞ்சொற்கொண்டல், புலவர்,

திரு சொ. சிங்காரவேலன் M. A., Dip Ling

திருத்தொண்டர் புராணத்தில் உள்ள அறுபத்து மூவர் வரலாறுகளையும் சேக்கிழார், தாம் மெய்யுணர்வான் அறிந்த செய்திகளையும், கல்வெட்டு முதலிய வரலாற்று மூலங்களையும் ஆராய்ந்த குறிப்புக்களையும் துணைக்கொண்டு மிக்க சிறப்புடன் பாடியுள்ளார். சேக்கிழாரது வரலாற்றுணர்வைத் தமிழ்ப் பேரறிஞர் டாக்டர், மா. இராசமாணிக்கனுர் தம்நூல்களில் இனிது விளக்கியுள்ளார். பல்வேறு நாடுகள், ஊர்களிற் பிறந்தருளிய நாயன்மார்களைப் பற்றி நுட்பமாகச் சேக்கிழார் தெரிவிக்கும் குறிப்புக்கள் மிக்க வியப்பிற்குரியனவாக உள்ளன.

ஒன்பது நாயன்மார்களின் நாடுகள் சேக்கிழாராற் குறிக்கப் பெறவில்லை. அந் நாயன்மார்களின் பெயர்கள் வருமாறு :

(1) இளையான்குடி மாறர்	(5) சாக்கியர்
(2) கணம்புல்லர்	(6) நேசர்
(3) கழற்சிங்கர்	(7) பெருமிழலைக்குறும்பர்
(4) கூற்றுவர்	(8) மானக்கஞ்சாறர்

முப்பத்தொரு நாயன்மார்கள் சோழநாட்டினர்; எண்மர் நடு நாட்டினர். எழுவர் தொண்டைநாட்டினர்; நால்வர் பாண்டிய நாட்டினர்; இருவர் மலை நாட்டினர்; ஒருவர் கோனுட்டினர்; ஒருவர் மழநாட்டினர். சேக்கிழார் நாடு குறிப்பிடாத மேற் கூறப்பெற்ற ஒன்பதின்மருள் சிலருடைய நாடு முதலிய பிற செய்திகள் ஆராய்ந்து முடிவு போக்கப் பெற்றுள்ளன.

சேக்கிழார் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தைப் பாடியுள்ள முறை சிறப்பாக ஊன்றி உணர்தற் குரியது. "தொண்டை நாட்டு நிலப்பகுதிகள், அவற்றின் இயல்பு, அந்நிலப்பகுதிகளில் உள்ள சிறப்புடைத் தலங்கள், அத்தலங்களைப்பற்றிய சிறப்புக்கள்

முதலியவற்றை மிகத்தெளிவாகக் கூறியுள்ளார். திணைமயக்கம் பெற்ற பதிகளையும் நன்ருக விளக்கியுள்ளார். இவற்றை ஊன்றிக்காண, இப்புலவர் பெருமான் தொண்டை நாடு முழுவதும் நன்ருகச் சுற்றிப் பார்த்தவர் என்பது உறுதிப்படும்" என்பர் அறிஞர்.1

தலையாலங்காடு என்ற ஊரிலிருந்து திருவாரூர்க்கு வரும் வழியில் உள்ள ஊர்களைச் சம்பந்தர் வழிபட்டமை சேக்கிழாராற் கூறப்பெறுங்கால், முறைபிறழாமல் இப்போதும் உள்ள முறைப்படி - தலையாலங்காடு, பெருவேளூர், சாத்தங்குடி, கரவீரம், விளமர் ஆகியவற்றைக் காணலாம். இவ்வாறே அப்பர், சம்பந்தர், சுந்தரர் தலயாத்திரைகள் சேக்கிழாரால் முறை பிறழாது மொழியப்பெற்றுள்ளன.2 தமிழகத்தின் நில அமைப்பு நாட்டு அமைப்பு, ஊர்களின் அமைப்புக்களை நன்கு உணர்ந்தவர் சேக்கிழார் என்பது அவரது பாடல்களை இனிது ஓதுங்கால் புலனுகும்.

சில ஊர்களைக் குறிப்பிடும்போது, அதே பெயரில் உள்ள வேறு ஊர்களோடு குழப்பம் அடையாதபடி மிகத் தெளிவாக அடைமொழி புணர்த்துவது சேக்கிழார் இயல்பாகும். எடுத்துக் காட்டாக, ஆதனூர் என்ற பெயருடன் பல ஊர்கள் தமிழகத்தில் வழங்குவதால், நந்தனர் 'பிறந்த ஊர் ஆகிய ஆதனூர் இன்னதுதான்' என்று தெளிவாக உரைக்கின்ருர் சேக்கிழார். மேற்காடு என்ற பகுதியைச் சேர்ந்த ஆதனூரே அது என்று உணர்த்துகின்ருர் இப்பெரும்புலவர் :

"பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிகள் திரைக்கரத்தால்
முகந்துதர இருமருங்கும் முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணை நீர் நன்னுட்டு மேற்கா நாட் டாதனூர்."

செறுத்துணையார் பிறந்தது 'தஞ்சை' என்று கூறவந்தசேக்கிழார் அஃது இந்நாட்டுள்ளதெனக் கூறுவாராய் 'மருகல் நாட்டுத் தஞ்சாவூர்' என்று விளக்குவதும், அது சோழநாட்டின் உட்பகுதிகளுள் ஒன்றே என்பதனைத் தெளிவுறுப்பவராய்,

---

1. பெரியபுராண ஆராய்ச்சி மா. இராசமாணிக்கனர்- 1948. பக். 210.

2. பெரியபுராணம் - 573.

"தெள்ளுந்திரைகள் மதகுதொறும் சேலும்கயலும் செழுமணியும்
தள்ளும் பொன்னிநீர் நாட்டு மருகணுட்டுத் தஞ்சாவூர்"

எனப் பாடியுள்ளார். இவ்வாறே இடங்கழிநாயனர், கணம் புல்லநாயனர் பிறந்த ஊர்களைக் குறிக்கும்போது தாம் நன்கு தெளிவுறுத்திக் கூறுதற்காக, முன்னோர் கருத்திற்கு மாறுபட்டும் மொழிந்துள்ளார் நம் ஆசிரியர் என்பதனை எண்ணும்போது, உண்மையை உரைப்பதில் எத்துணை உறுதிப்பாடுடையவர் சேக்கிழார் என்பதனை உணரலாம்,

நம்பியாண்டார் நம்பிகளும், சுந்தரரும் ஏயர்கோன்கலிக்காமர் பிறந்த ஊர் இன்னதெனக் கூறிடவில்லை. ஆனல். வடகரைக் கீழ்பால் உள்ள திருப்பெரு மங்கலமே இவர் பிறந்த ஊர் என்று தெளிவாக்குகின்ருர் சேக்கிழார் :

"நீடு வண்புகழ்ச் சோழர்நீள் நாட்டிடை நிலவும்
மாடு பொன்கொழி காவிரி வடகரைக் கீழ்பால்
ஆடு பூங்கொடி மாடநீடிய அணிநகர்தான்
பீடு தங்கிய திருப்பெருமங்கலப் பெயர்த்தால்."

"சுந்தரர்" 'மானக்கஞ்சாறர்' பற்றிக் கூறிய தொடர்,

"மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறன்"

என்பதே ? ஆயினும் சேக்கிழார்,

"கோலாறு தேன்பொழியக் கொழுங்கனியின் சாறொழுகும்
காலாறு வயற்கரும்பின் கமழ்சாறூர் கஞ்சனூர்"

என்று, அவர் பிறந்தவூர் 'கஞ்சனூர்' ஆதலைப் புலப்படுத்தியுள்ளார். இவ்வாறே, விறல்மிண்டர் பிறந்தவூர் சேரநாட்டுச் செங்குன்றம் என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

"சேரர் திருநாடூர்களின் முன்சிறந்த மூதூர் செங்குன்றூர்"

சில ஊர்களைப் பற்றிக் கூறுங்கால் அவற்றோடு தொடர்புடைய கதைகள் உளவாயின் அவற்றையும் மறவாமற் கூறிவரும் இயல்பினர் சேக்கிழார் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுக்கள் காட்டலாம். பழையனூர் நீலி வரலாறு, அம்மை காஞ்சியில் அறம் வளர்த்த வரலாறு, வரி நீக்கிய ஒற்றியூர் வரலாறு தொண்டை மானுக்கருள் புரிந்த திருமுல்லைவாயில் வரலாறு முதலியன சிறப்பாகக் குறிக்கத்தக்கனவாம்.

ஊர்களை வருணிக்கப் புகுவதும், சிறந்த கவிதைச் செல்வங்களாக அப்பகுதிகளை அழகுறுத்துவதும் சேக்கிழார் இயல்புகள். அந்த ஊர்கள் எந்த நிலப்பகுதிகளைச் சேர்ந்தனவோ அந் நிலத்தின் இயல்புகளுக்கேற்ப அவற்றை எடுத்துரைக்கும் கவித் திறன் உடையவர்.

ஆற்றங்கரைத் தலமாகிய ஆதனூர்பற்றிய மருதவிளக்கம், கடற்கரைத் தலமாகிய நாகை பற்றிய நெய்தல் விளக்கம், மலைத் தலமாகிய உடுப்பூர் பற்றிய குறிஞ்சி விளக்கம் முதலியவற்றை இதற்குக் காட்டலாம்.

சோழநாட்டின் முதலமைச்சராக விளங்கிய சேக்கிழார்க்குப் பூம்புகார் நகரைப் பற்றிப் பாடத் தொடங்கும்போதே நெஞ்சு இனிக்கின்றது. சோழன், திருமரபு பெருக்கிய சிறப்புடையது; மருதநீர்நாட்டு வயல்வளம் தர அளிப்பது; காவிரிநீர் பாய்ந்து கடலையும் புனிதமாக்குவது; இத்தகு நலம் பல பொதிந்தது புகார் நகரம் என்கின்றார் :

"சென்னி வெண்குடை நீடனபாயன் திருக்குலம் புகழ்
பெருகிய சிறப்பின்
மன்னுதொல்புகழ் மருதநீர்நாட்டு வயல்வளந்தர
இயல்பினில் அளித்துப்
பொன்னி நன்னதி மிக்கநீர் பாய்ந்து புணரி
தன்னையும் புனிதமாக்குவதோர்
நன்னெடும்பெரு தீர்த்த முன்னுடைய நலஞ்சிறந்தது
வளம்புகார் நகரம்."

சோழநாட்டுத் திருத்தலங்களின் பழமை சான்றதிருவாரூரை மிகவிரிவாகப் பாடுகின்றார். சுந்தரர் வரலாற்றோடு தொடர்பு கொண்ட தலமன்றோ அது! திருநகரச் சிறப்பு என்று தனிப் பகுதியையே இதற்கு அமைத்துக் கொள்ளுகின்றார். சோழ நாட்டின் பழமைச் சிறப்புடையது; திருமகள் வழிபட்டது எனத் தொடங்குகின்றார். வேத ஓசை, வீணையின் ஓசை, சோதி வானவர் தோத்திர ஓசை, மாதர் ஆடல் மணிமுழவோசை, கீத ஓசை அவ்வூரில் பெருகிநிற்கும். எப்போதும் இசைக் கருவிகள் இன்பமாக ஒலித்தவண்ணம் இருக்கும். வீதிகளில் தேர்மணி ஒலி கேட்டவண்ணம் இருக்கும். யானை, குதிரை ஒலிகளும் அப்படியே. பரவையார் பிறந்தருளிய மாளிகை அவ்வூரின் சிறப்புக்களில் ஒன்று. பன்றியும் அன்னமும் தேடியும்காணா இயலாத பரம்பொருள் சுந்தரர்க்காகத் தூதுபோய் நடந்த செந்தாமரைப் பாதங்கள் மணம் வீசிய மண் அது.

(தொடரும்)

சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னாகரம்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 30, இதழ் 9, பக்கம் 506 இன் தொடர்ச்சி)

गौरी त्रयोदशी ज्ञेया शिवो ज्ञेया चतुर्दशी ।
तयोस्तु संगमे प्राप्ते शिवरात्रि व्रतं चरेत् ॥

— सुप्रभेदागमम्

த்ரயோதசி திதியானது கௌரிதேவி, சதுர்த்தசித்தி சிவன் இவர்கள் சேர்ந்த தினமான த்ரயோதசி சதுர்த்தசி சேர்ந்த நாளில் சிவராத்திரி அனுஷ்டானம் செய்வது உத்தமம்.

— சுப்ரபேதம்.

द्वे तिथी चैकमासेतु स्यातां संवत्सरे क्वचित् ।
पूर्वेतु पितृकार्याणि चापरे दैविकं भवेत् ॥

ஒருவருஷத்தில் எப்பொழுதாவது ஒருமாதத்தில் இரண்டு திதி வருமானல் முன்னுள்ள திதியில் பித்ருகாரியத்தையும் பின்னுள்ள திதியில் தேவ காரியத்தையும் செய்யவேண்டும்.

—சங்க்ரஹஸாரரத்னாவளி.

अमावास्यायुतावापि त्रयोदश्या युतापिवा ।
चतुर्दश्यधिका रात्रिः शिवरात्रिरितिस्मृता ॥

— स्वायंभुवम्

அமர சம்பந்தமிருந்தாலும் அல்லது த்ரயோதசி சம்பந்தமுள்ளதாகவிருப்பினும் சதுர்த்தசி அதிகமாகவுள்ள இரவில் சிவராத்திரி விருதமனுஷ்டிக்கவேண்டும். —சுவாயம்புவம்.

माघकृष्ण चतुर्दश्यां मादिदेवो महानिशि ।
शिवलिङ्गतयोत्भूतः कोटिसूर्य समप्रभः ॥
तदाप्रभृति पुण्या सा वर्तते शिव मानिनी ।

तस्यां शिवचतुर्दश्यां मध्ययामस्य मध्यमे ॥
युक्ता चतुर्दशी यत्र शिवसायुज्य गामिनी ।

— विजयागमम्

மாசிமாதத்திய கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் மஹாநிசியில் சிவலிங்காரமாக கோடி சூரிய ப்ரகாசமாய்த் தோன்றினர். அந்த இரவு சிவனுக்கு ப்ரீதியானது; அந்த நாள் முதற் கொண்டு புனிதநாளாக விளங்குகிறது. ஆதலால் அந்த மாசிமாதத்திய கிருஷ்ணபக்ஷத்து சதுர்த்தசி தினத்தினுடைய நடுயாமத்தின் நடுவிலுள்ள சதுர்த்தசி சிவசாயுஜ்யத்தையளிக்கும், ஆதலால் அன்று சிவாராதனம் செய்யவேண்டும்.

— விஜயாகமம்.

रात्रौ यमद्वयादर्वाक् घटिकैका महानिशा ।
तस्यां चतुर्दशी युक्ता तद्रात्रिश्शिवरात्रिका ॥

— कुमारतंत्रम्

இரவில் இரண்டுயாமத்தி னருகிலுள்ள ஒருநாழிகைக்கு மஹாநிசி எனப்பெயர் அந்த வேளையில் சதுர்த்தசியிருக்கும் தினமே சிவராத்திரியாகும்.

— குமாரதந்திரம்.

कुम्भ मासि सौरपक्षे कृष्णपक्षे चतुर्दशी ।
त्रयोदशि समायुक्ता शिवरात्रिव्रतं चरेत् ॥

— अचिन्त्य विश्वसादाख्यम्

சௌரமான ரீதியிலுள்ள மாசிமாதத்திய கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில், த்ரயோதசியுடன் கூடியதாகவுள்ளதில் சிவராத்திரிவிரதம் அனுஷ்டிக்கவேண்டும்.

— அசிந்தியவிச்வசாதாக்யம்.

रवौ कुंभगते पश्चात् कृष्णपक्षे चतुर्दशी ।

— ललितम्

சூரியன் கும்பத்தில் ப்ரவேசித்த காலத்தில் (மாசியில்) கிருஷ்ணபக்ஷத்திய சதுர்த்தசியில் சிவராத்திரி அனுஷ்டிக்க வேண்டும்.

माखस्नाने विशेषाच्च चान्द्र माखः प्रशस्यते ।
व्रतोपवासो मर्त्यानां चान्द्रेमासे समाप्यते ॥
स्थापनं प्रोक्षणं दीक्षां शिवरात्रि शिवोत्सवम् ।

आचरेत्सौरपक्षेतु चान्द्रपक्षेतु निन्दितम् ॥
गर्वितः चान्द्रपक्षेतु शिवरात्रि व्रतं चरेत् ।
तद्राष्ट्र भूपतीनांच जनानामपि नाशनम् ॥
शिवरात्रिव्रतवतां रौरवं नरकं भवेत् ।
तद्दोष शमनार्थाय चान्द्रायण मथाचरेत् ॥
पुनश्शास्त्रोक्त मार्गेण सौरमासे व्रतं चरेत् ।

— सिद्धान्तशेखरे

சாந்திரமானம், சௌரமானம் என்ற இரண்டுவிதமான பக்ஷத்தில் மாகஸ்னானம் முதலியது வ்ருதம் உபவாஸம் இவைகளைச் சாந்திரமானமுறையில் செய்யவேண்டும். பிரதிஷ்டை, ஸம்புரோக்ஷணம், தீக்ஷை, சிவராத்திரி, சிவோத்ஸவம் இவைகளை சௌரமான முறையில் அனுஷ்டிக்க வேண்டும். சாந்திர பக்ஷம் இதற்குக்கூடாது. யாரேனுமொருவர் கர்வம்கொண்டு சாந்திரமானத்தில் சிவராத்திரி விரதானுஷ்டானம் செய்வார்களேயானல் அந்தராஷ்டத்திலுள்ள அரசர்கள் பிரஜைகள் யாவருக்கும் நாசம் உண்டாகும். அவ்வாறு சிவராத்திரி விருதமனுஷ்டிப்பவர்கள் ரௌரவம் என்னும் நரகை அடைவார்கள். ஆதலால் அதன்பொருட்டு சாந்திராயண விரதம் செய்துவிட்டு மறுபடியும் சௌரமான முறையில் சிவராத்திரி பூஜை விரதமனுஷ்டிக்கவேண்டும். —சித்தாந்தசேகரம்.

भानोरस्तं समारभ्य यावद्विंशति नाडिका ।
पश्चात्पर्वयुता चेत्तु नहिदोषयुता भवेत् ॥

சூரியாஸ்தமனம் முதல் இரவு இருபது நாழிகைக்குப் பிறகு அமா சம்பந்தமிருக்குமானல் அமாசம்பந்த தோஷம் கிடையாது.

पूर्वेद्युर्वा परेद्युर्वा महानिशि चतुर्दशी ।
व्याप्ता सा दृश्यते यत्र तस्यां कुर्यात् व्रतं नरः ॥

— ईशानसंहितायाम्

முதல்நாளாயினும் மறுதினமாயினும் என்று நடுநிசியில் சதுர்த்தசி வியாபகமுள்ளதாக இருக்கிறதோ அன்று சிவராத்திரி பூஜைசெய்யவேண்டும். — ஈசானசம்ஹிதை.

रसानुविद्धं कनकं शोध्यते वह्नियोगतः ।
तथा श्रवण संयोगात् अमाविद्धो विशुद्ध्यति ॥ — सन्तानम्

பாதரஸத்துடன்கூடியசுவர்ணம்அக்னியின்சேர்க்கையால் எவ்வாறு சுத்தமாக ஆகிறதோ அவ்வாறு ச்வரண நக்ஷத்திர யோகத்தினுல் அமா தோஷம் நீங்கும். — சந்தானகமம்.

हरि श्रविष्ट वारीश त्रक्ष संयुक्त तद्दिने ।
तद्रात्रौ शिव पूजायां अमादोषो नविद्यते ॥
तद्दिने शिव रात्रिस्स्यात् तुकोटि शिवरात्रिकम ।

— कारणागमम्

திருவோணம், அவிட்டம், சதயம், என்ற இந்த நக்ஷத்திரம் சதுர்த்தசியுடன் சேர்ந்திருக்குமானுல் அந்த இரவிற்கு அமா தோஷம் கிடையாது. — காரணுகமம்.

இவ்வாறு கூறப்பட்ட பல ஆகமங்களின் விதியைக் கொண்டு ஆராய்ந்தால், மஹாசிவராத்திரி சிவபூஜை சௌரமான மாதமான மாசிமாதத்திய கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் அனுஷ்டிக்கவேண்டும். ஒருமாதத்தில் இரண்டு சதுர்த்தசி வந்தால் மாகபால்குன சமீபமான கடைசி சதுர்த்தசியில் செய்யவேண்டும். இரண்டுநாள் சதுர்த்தசியிருந்தால் மாக நிசியில் என்று சதுர்த்தசியிருக்கிறதோ அன்று அனுஷ்டிக்க வேண்டும். என்று சதுர்தசி அதிகமாக இருக்கிறதோ அன்று அனுஷ்டிக்கவேண்டும். த்ரயோதசியுடன் கூடிய சதுர்த்தசியில் அனுஷ்டிக்கவேண்டும். இருபது நாழிகைக்குமேல் அமாவாசை வந்தால் அமா தோஷமில்லை. மேலும் திருவோண நக்ஷத்திரம் சேர்ந்தால் அந்த சிவராத்திரிக்கு அமா சம்பந்தம் வந்தால் தோஷம் இல்லை அமா சம்பந்தமிருந்தாலும் த்ரயோதசி சம்பந்த மானதாயினும் சதுர்த்தசி அதிகமாயும் நிசியில் வியாபகமாயுமுள்ள தினத்தில் சிவராத்திரி அனுஷ்டானம் செய்யவேண்டும். யாராவது ஒருவர் சாந்திரமான ரீதியில் சிவராத்திரி விருதாநுஷ்டானம் செய்வார்களானுல் ரரஜபீடையும் ஜனபீடையும் உண்டாவதும் அப்படி விரதானுஷ்டானம் செய்தவனும் ரௌரவம் என்ற நரகத்தை அடைவான் அதன் பரிகாரத்தின்பொருட்டு சாந்திராயண விருதானுஷ்டானம் செய்து மறுபடி சௌரமான ரீதியில் விரதானுஷ்டானம் செய்யவேண்டும். சிவராத்திரி, சிவோத்ஸவம், தீக்ஷை, மாஸபூஜை இவைகள் சௌரமானத்தால் அனுஷ்டிக்க வேண்டும் என்று அறியத்தக்கது. — ஸ்வமதம்.

(தொடரும்)

திருவருட்பயன் விளக்க உரை

(மலர் 30, இதழ் 9, பக்கம் 468-இன் தொடர்ச்சி)

அருளது நிலை

4-ம் அதி.

அஃதாவது, இறைவனது திருவருளின் இயல்பு. இது முதல் அதிகாரத்தில் "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்" எனக் கூறப்பட்ட சத்தியது இயல்பேயாம். அங்குக் கூறியவாறு சத்தி இறைவனின் வேறன்றாயினும், மன்னுயிர்களைப் பலவாற்றானும் பக்குவப்படுத்திச் சிவமாந்தன்மையை எய்துவிப்பது அதுவேயாதலின், அதனது இயல்பு இனிது விளங்குதற்பொருட்டு வேறோர் அதிகாரமாக வைத்துக் கூறுகின்றார். இதனானே, மேல் மூன்றதிகாரங்களாலும் பதி முதலிய மூன்று பொருள்களின் இயல்பும் கூறிய பின்னர் இது கூறுதற்குரிய இயல்பு இனிது விளங்கும்.

முதற் குறள்,

> " அருளிற் பெரிய தகிலத்தில், வேண்டும்
> பொருளிற் றலையிலது போல் "

எனவரும்

இதன் பொருள் :- வேண்டும் பொருளின் பெரியது இலதுபோல் - ஒரு செயற்கு இன்றியமையாத பொருளைவிட அவ்விடத்திற்குச் சிறந்த பொருள் வேறு எதுவும் இல்லாமை போல; அருளின் பெரியது அகிலத்து இல் - இறைவனது திருவருளைவிடச் சிறந்து நிற்பதொரு பொருள் எவ்விடத்தும் இலதாம்.

விளக்கவுரை :- என்றது. 'எப்பொருட்கும் இன்றியமையாததாய் நிற்பது திருவருள்' என்றவாறு வேண்டுதல், இங்கு, இன்றியமையாமை. வேண்டும் பொருளின் தலையாயது இன்மையாவது, ஒரு செயல் நிரம்புதற்கு வேண்டப்படும்

பொருள் மிகச் சிறியதேயாயினும் அதனாலன்றி அச்செயல் நிரப்பப்படாமை. அதனை, அச்சாணி மிகச் சிறியதேயாயினும் அதனாலன்றித் தேர் ஓடுதல் நிரம்பாமையும், சுவைபட அடும் அடிசிற்கு வேண்டப்படும் உப்பு மிக எளியதேயாயினும் அதனாலன்றி அடுதல் தொழில் நிரம்பாமையும் போல்வன வற்றில் வைத்துக் கண்டுகொள்க. 'இலது' என்பது அப் பண்பின்மேல் நின்றது

இதனால், எப்பொருளும் அருளையின்றி அமையாமை கூறப்பட்டது.

இரண்டாவது குறள்,

> " பெருக்க நுகரவினை பேரொளியா யெங்கும்
> அருக்கனென நிற்கு மருள்''

எனவரும்.

இதன் பொருள் :- அருக்கன் என - உலகில் உள்ளோர் தொழில் செய்தலும், அவற்றின் பயனைத் துய்த்தலும் நிகழுமாறு பகலவன் புறப் பேரொளியாய் எங்கும் பரவி நிற்றல்போல; அருள் - இறைவனது திருவருள்; வினை பெருக்க நுகர - உயிர்கள் இருவினைகளை ஈட்டுதலும், அவற்றின் பயனை நுகர்தலும் நிகழுமாறு; பேரொளியாய் எங்கும் நிற்கும் - அகப் பேரொளியாய் எங்கும் நிறைந்து நிற்கும்.

விளக்கவுரை :- பொருட்கண் உள்ள அடைவினைகட்கு ஏற்ற அடை வினைகள் உவமைக்கண்ணும் வருவித்து உரைக்கப்பட்டன. 'புறம் அகம்' என்பன ஆற்றலால் வந்தன. அக ஒளியாவது, அறியாமையிருளைப் போக்குகின்ற அறிவு. " அறிவாகி எங்கும் நிறைந்து நிற்கும்" என முதற்குறளிலே கூறினர்.

இதனால், 'இருளால் மறைக்கப்பட்ட கண்ணினையுடையார்க்குப் பகலவனை இன்றி யாதொரு தொழிலைச் செய்தலும், அவற்றின் பயனைத் துய்த்தலும் கூடாமைபோல, ஆணவ மலத்தால் மறைக்கப்பட்ட அறிவினையுடைய உயிர்கட்கு இறைவனது திருவருளையின்றி யாதொரு வினையையும் ஈட்டுத

ளும், அதன் பயனை நுகர்தலும் கூடா' என, அருள் இன்றி யமையாதவாறு தெரித்துக் காட்டுமுகத்தால், அதனது பயன் கூறப்பட்டது. இவ்வாற்ருன் இங்கு 'அருள்' என்றது திரோதானத்தை என்பது விளங்கும்.

மூன்ருவது குறள்,

"ஊனறியா தென்றும்; உயிரறியா தொன்றும்; இவை
தானறியா தாரறிவார் தாம்"

எனவரும்.

இதன் பொருள்:- ஊன் என்றும் அறியாது - உடம்பு ஒருகாலத்தும் அறிவுடையதாதல் இல்லை; உயிர் ஒன்றும் அறியாது - உயிரும் உடம்பு இல்லாதபொழுது ஒன்றையும் அறியமாட்டாது; (ஆகவே,) இவை தான் அறியாது ஆர் அறிவார் - இவ்விரண்டனையும் அருள் அறிந்து கூட்டுவியாமல் வேறு யாவர் அறிந்து கூட்டுவிப்பார்!

விளக்கவுரை:- ஆகவே, 'அருள் உண்மை நன்கு துணியப்படும்' என்பதாம். இஃது ஒழிபளவை (பாரிசேடப் பிரமாணம்.) தாம், அசைநிலை.

இதனல், அருள், அருக்கன் என நின்று உயிர்களையும், உலகத்தையும் கூட்டிச் செயற்படுத்துதல் கூறுமுகத்தால், அதன் உண்மை நிறுவப்பட்டது.

(தொடரும்)

சொக்கநாத வெண்பா

உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
கணத்தும் உணரும்வகை காணேன் — உணர்த்தியென்னுட்
பூண்டமல மாயைகன்மம் போக்கிச் சிவானந்தத்
தாண்டருள்வை சொக்கநா தா. 26

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

ஆவணிமூல விழாவில்;

தருமையாதீனம்
25-ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
திரு. ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களுக்கு
"செந்தமிழ்க் கலைச்செல்வர்"
என்னும் பட்டம் வழங்கியபோது அருளிய

ஆசியுரை

" ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் — பாலொளியாம்
மத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆலவா யா."

எல்லாம் வல்ல செந்தமிழ்ச்சொக்கன் திருவருளிலே திளைத்திருக்கின்ற நாமெல்லாம், அப்பெருமான் திருவிளையாடல் செய்த இந்த நல்ல நாளை எதிர்நோக்கி, அவர் செய்த அற்புதங்களைக் கேட்டு இன்புறுவதற்காக இருக்கின்றோம்; இந்த நல்ல நாளில், ஒரு வந்தியம்மையாருக்காகவும், மணிவாசகப் பெருமானுக்காகவும் பெருமான் பல திருவிளையாடல்கள் செய்திருக்கின்றான்; குறிப்பாக, செந்தமிழ்ச் சொக்கன் நன்பாட்டுப் புலவனைச் சங்கம் ஏறிப் பொற்கிழியைத் தருமிக்கு அருளினான் என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. பெருமான் மண் சுமந்து, உதிர்ந்த பிட்டை உண்டு பெருமகிழ்ச்சி அடைந்தான். மணிவாசகப் பெருமானுடைய பண்சுமந்த பாடலுக்காக மண் சுமந்தான்.

' பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

என்ற இந்தச் சரித்திரந்தான், இந்தத் திருநாளிலே ஒரு முக்கிய சரித்திரம். தாயுந் தந்தையுமில்லாத இறைவன், வந்திக்காக,

தனிக் கூலியாளாகவந்தான் ' எனக்கு ஒரு தாயாக வந்தவள் வந்தி' என்பது இறைவன் திருவருளிலே எழுந்த திருவாக்கு. அதே மாதிரி காரைக்கால் அம்மையாரையும் பெருமான் ' அம்மையே ' என்ருன்.

பக்தி என்ற ஒன்றினுல்தான் காரைக்காலம்மையார் அம்மையே என்று கூறும் சிறப்பைப் பெற்ருர். அந்த பக்தியென்றசிறப்பினுல் தான் பிட்டுவிற்று உண்ட கிழவியும் 'அன்னே' என்ற ஒருபெரும் பட்டத்தைப் பெற்ருள். அந்த பக்தியினுல்தான் நாமும் உலகத் திலேசெம்மையாக வாழலாம்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் "

என்று திருவள்ளுவர் சொல்லியுள்ளார். அந்தச் சொல்லே உள் ளத்தில் வைத்துத்தான் வாழ்வாங்கு வாழவேண்டும். சிறிதுகாலம் வாழ்ந்தாலும் அந்தத் தெய்வ பக்தியால்தான் செம்மையாக வாழ முடியும். நம்முடைய - தமிழோ, அல்லது வடமொழியோ, எந்தநூலே எடுத்தாலும் அடிப்படையிலேயே தெய்வ பக்தியைத் தான் கூறுகின்றது. மொழித்ததுவேஷமே இல்லே. அப்பர் சுவாமியைவிடச் சீர்திருத்தவாதி இருந்திருப்பாரா என்ருல், இனிமேல் இருக்கப் போகிருரா என்ருல் கிடையாது.

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, ' ஏமாப் போம் பிணியறியோம், பணிவோமல்லோம், இன்பமே எந் நாளுந் துன்பமில்லே; நமனுக்கு அஞ்சோம் ' என்று சொன்னவர் அவர் ஒருவர்தான். ஒரு தனி சாம்ராஜ்யத்திற்கு அரசனுகிய மகேந்திரவர்மப் பல்லவனே எதிர்த்து நின்றவர் அவர்தான். அவ னேயே சைவநெறிக்கு அழைத்த பெருமை அப்பர் பெருமானேயே சாரும். அவரே ' வடமொழியும் தென்றமிழும் மறைகள் நான் கும் ஆனவன் காண் ' என்று சொல்கிருர். ஆகையினுலே, எந்த மொழியாய் இருந்தாலும் அதன் உட்பொருள் நோக்கி அதனேக் கூறுகின்ற பெரியோர்கள் நோக்கத்திலே செல்ல வேண்டும் நம் ஆசிரியர் ஒரு பாடலின் பொருளேக் கூறினுல், அந்தப் பொருளேத்தான் மாணுக்கர்கள் அறிய வேண்டும். முன்னேர் செய்ததை நாம், அந்த அடிப்படையிலே, அந்த தத்துவத்திற்கு மாருமல் வழிபாடு செய்தல் வேண்டும். அந்த வழிபாடுதான் இறைவனிடத்திலே நம்மை ஒற்றுமைப்படுத்தும்.

சொக்கநாதப் பெருமானுடைய இத்திருநாளிலே பட்டம் பெறுகின்றவர் ஒரு பெரியவர், நல்ல அன்பர்; வாயைத் திறந்தால் பெரியசாமித் தூரன் அவர்களுடைய கவி இல்லாத நாளே இருக்காது. இன்று அம்மையார் (சௌந்திராகைலாசம்) வந்திருப்பதும் பெரிய விசேஷம்.

சிறப்புப்பட்டம்பெறுகின்றவரைப்பாராட்ட சமயசஞ்சீவியாய் ஒரு சஞ்சீவி வந்திருக்கின்றார். சமயத்தில் சஞ்சீவியாய் உள்ளவர் அவர்; சமயத்தில் அல்ல; சமயத்திற்குச் சஞ்சீவி அவர்; சமயத்தில் சஞ்சீவி என எண்ணவேண்டாம். அதோடு ஒரு பெரிய விசேஷம் மீனாட்சி அம்மையே 'இது சரியாக நடக்கின்றதா? நம் சுவாமியின் பேரை வைத்துச் செய்கின்றார்களே! என்று பார்ப்பதற்கு வந்திருப்பதுபோல சௌந்தரா கைலாசம் வந்துள்ளார். பட்டம் பெறுகின்றவரும் - ஒரு முருக பக்தர்; அவரை வாழ்த்த வந்திருக்கின்ற அம்மையார் அவர்களும் முருகபக்தர்,

"நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்"

என்ற முறைப்படி இந்தத் திருவருள் வாய்ப்பு அமைந்துள்ளது.

அதை நல்ல முறையிலே பயன்படுத்தி அந்த பக்தி நெறியிலே சென்று 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற திருவள்ளுவர் வாக்குப்படித் 'தூரன்' அவர்களை வாழ்க வாழ்கென வாழ்த்தி செந்தமிழ்ச் சொக்கன் திருவடிகளைச் சிந்திக்கின்றோம்.

உங்கள் எல்லோருடைய அன்பினாலும், செந்தமிழ்ச் சொக்கனுடைய திருவருளினாலும், பெரியசாமித் தூரன் அவர்கள் "செந்தமிழ்க் கலைச்செல்வர்" என்ற பட்டத்தைப் பெறுகின்றார். ஏனென்றால் 'கலைக்களஞ்சியம்' என்னும் பெரிய வேலையை நினைக்க முடியாத பெரிய வேலையை, தன்னுடைய ஆற்றலினாலே உடல் வலிமை குன்றியிருந்த காலத்திலும் அயராது உழைத்து 'கலைக்களஞ்சியத்தை' உருவாக்கிய பெருமை அவரையே சாரும். வாழ்க அவரது நற்பணி! என்று கூறி, செந்தமிழ்க் கலைச் செல்வர் என்னும் பட்டத்தை அன்பர் தூரன் அவர்களுக்கு அளிக்கின்றோம்.

"செந்தமிழ்க் கலைச்செல்வர்" என்ற பட்டம் பெற்ற திரு ம. ப. பெரியசாமித்தூரன் அவர்கள் நிகழ்த்திய சிறப்புரைச் சுருக்கம்:—

ஒருதாய் தன்னுடைய குழந்தைக்கு அன்போடு எத்தனையோ வகையான இனிப்புப் பண்டங்களை வழங்குகின்றாள். குழந்தை எல்லாவற்றையும் வாங்கிக்கொள்கிறது. பின்னால் அதில் ஒன்றை எடுத்து அம்மா இதை நான் கொடுக்கிறேன் நீ சாப்பிடு என்று அந்தக் குழந்தை சொல்லுமானால் தாய்க்கு எவ்வளவு மகிழ்ச்சி யாக இருக்கும். தாய் கொடுத்தது தான்; குழந்தை எங்கிருந்தும் சம்பாதித்து வரவில்லை. ஆனால், அந்தத் தாயினுடைய அன்பி னாலே பெற்றதை – தன்னுடைய கையில் உள்ளதைத் திருப்பிக் கொடுக்கின்றது. அதைக் காணிக்கையாகக் கொடுக்கும்போது தாய்க்கு எவ்வளவு பெரிய மகிழ்ச்சி உண்டாகிறது. அதைப் போல, எத்தனையோ பேறுகள் இறைவனுடைய அருளினாலே, சொக்கநாதப் பெருமானின் அருளினாலே, முருகப்பெருமானின் அருளினாலே, குருமகாசந்நிதானத்தின் அருளினாலே, எனக்குக் கிடைத்தன. அதிலே சிலவற்றை, குழந்தை தாய்க்குக் கொடுப் பது போல இதை வழங்குகின்றேன். அவர்களும் அந்தத் தாயைப்போல அன்போடு ஏற்றுக் கொள்வார்களாக. (தாம் இயற்றிய சில கவிதைத் தொகுப்பு நூலைக்கொடுக்கின்றார்) இந்தக் கலைக்களஞ்சிய வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டுவந்த போது, சில தொகுதிகள் வெளிவந்த காலத்தில் அப்படியே நின்றுவிட்டது. அப்பொழுது யார் செய்த புண்ணியமோ? ஒரு பெரியார் ஆசியினாலே இந்த அளவாவது எனக்கு உடல் நலம் தேறியது. அது நான் என்ன பாக்கியம் செய்து கிடைத்ததோ. ஏதோ, சிறுவயது முதற்கொண்டு 'பச்சைக்குழந்தைப் பரு வத்தே வந்தென்னை இச்சையால் ஏற்றுக்கொண்ட' அந்த முருகப்பெருமான் அருள்தான்" என்று நினைக்கின்றேன்.

டாக்டர் சஞ்சீவி, திருமதி சௌந்திரம் கைலாசம் இரண்டு பேரும் என்னிடம் அன்புடையவர்கள். ஆதலால், இவர்கள் கூறிய வற்றை சீர்தூக்கிப்பார்த்துச்சொன்னதாகஎண்ணக்கூடாது. குரு மகாசந்நிதானம் அவர்கள் சொல்லியவாசகங்களுக்கு நான் எந்த வகையிலும் நன்றி சொல்ல முடியாது. நீளப்பேசிக்கொண்டே சென்றால் அதிகமாகப் பேசிவிட்டதாகக்கூறப்படும். குறைத்துச் சொன்னால் இவ்வளவுதானே கூறினர்கள் என்றிருக்கும். அப்படி அதைச் சொல்லுவது சரியல்ல. அன்பு என்பதை நாம் வார்த்

தைகளினல் சொல்லமுடியாது. ஒரு உள்ளம்தான் மற்ருெரு உள்ளத்தை அறிந்து கொள்ள முடியும்.

ஒன்று சொல்லுகிறேன் உங்களுக்கு! நான் கல்லூரியிலே படித்துக்கொண்டிருந்த காலத்தில், வனவள சங்கத்திற்குச் செல்வேன். நான் 1927-ல் இண்டர்மிடியேட் படிக்கும்போது என்னுடைய தோழர்கள் திரு. சி. சுப்பிரமணியம், திரு. ஓ. வி. அளகேசன் ஆகியவர்கள் அரசியலிலே ஈடுபாடுடையவர்கள் கடற்கரையில் 'THILAKAR GHAT' (திலகர் கட்டம்) அந்த இடத்திலே, அடிக்கடி சுதந்திரத்தைப் பற்றிய அரசியல் பேச்சுக்கள் நடைபெறும். நானும் கூடச்செல்லுவேன். கொஞ்ச நேரம் இருப்பேன். பின்னல் அங்கிருந்து நேராக CONNIMMERA (கன்னிமரா) லைபரரிக்குப்போய் அங்குள்ள ENCICLOPADEA எப்படி இருக்கிறது என்பதைப்பார்த்துக் கொண்டிருப்பேன். அப்பொழுதே, நம் மொழியில் இப்படி ஒரு 'கலைக் களஞ்சியம்' வெளியிட வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. இது தான் என்னுடைய ஆசை. அதற்காக எத்தனையோ முறை முயற்சி செய்து பல குறிப்புக்கள் வைத்திருந்தேன். நான் ஒருமுறை தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் தலைமை வகித்துப் பேசியகாலத்தில் வருகைதந்த திரு. அவினசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்தார்கள். அவர்களிடம் நான், தமிழில் ஒரு 'கலைக்களஞ்சியம்' உருவாக வேண்டும் என்று சொன்னேன். அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அதற்கு யாரை நியமிப்பது என்ற எண்ணத்துடன் யார் யாரையோ கேட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது நான் இராம கிருஷ்ண உயர் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணி ஆற்றிக் கொண்டிருந்தேன். சிலரை நானே சிபாரிசு செய்தேன். பிறகு திரு. கல்கி அவர்கள் அமைச்சரிடம் கலைக்களஞ்சியப் பணிக்கு யார் யாரையோ தேடிக்கொண்டிருக்கின்றீர்களே, தூரனையே போட்டுவிடுங்கள்என்ருர்கள். அவர் இராமகிருஷ்ணமிஷனுக்குத் தேவை என்ருர் அமைச்சர். அது தொடங்கிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நல்ல முறையில் நடக்கத் தொடங்கிவிட்டது. அதற்கு யாரையாவது நியமித்துக்கொள்ளலாம் என்ருர் திரு. கல்கி அவர்கள். அப்பொழுதுதான் அமைச்சர் 'உங்களுக்கு இதை நிறைவேற்றமுடியும் என்ற நம்பிக்கை உண்டா' என்று என்னிடம்கேட்டார். நிறைவேற்ற முடியும் என்று உறுதியாகச் சொன்னேன்.

தற்பெருமையாகச் சொல்லவில்லை எவ்வளவு உழைத்திருக்கின்றேன் என்பது யாருக்குமே தெரியாது. பெரிய வேலையைச் சாதித்துவிட்டேன் என்று அகந்தை ஏற்பட்டுஇது (நோய்)

வந்து விட்டதோ? கடவுளையும் மறந்து விட்டு இந்தக் கலைக் களஞ்சியத்தில் ஈடுபட்டுவிட்டாயா? என்று இந்தச் சோதனை ஏற்பட்டுள்ளது. அதையும் நான் ஒரு CHALLENGE(சவாலாக) ஏற்றுக் கலைக்களஞ்சிய வேலையில் ஈடுபட்டேன். நான் உண்மையாக வேலை செய்தால் இறைவன் உடல் திறம் கொடுப்பான் என்று ஈடுபட்டதால் அந்தக் காரியத்தை முடிக்க முடிந்தது: ஆனல் ஒன்று சொல்கின்றேன்; புண்பட்ட பொன்மேனி என்று சொன்னர்களே அப்பொழுது நான் நினைத்துக்கொண்டேன்; சொக்கநாதனுடைய பொன்மேனி புண்படுவதா? பெருமானும் முருகப்பெருமானும் வேறல்ல. அந்தக் குழந்தையின் மேனியிலா அடிபடுவது

ஒரு சமயம் முருகப்பெருமான் ஒரு பூனையின் கன்னத்திலே கீறிவிட்டார். மறுநாள் அன்னையின் கன்னத்தில் கீறல் இருந்தது. அம்மா! உன் கன்னத்தில் எப்படி இந்தக் கீறல் வந்தது என்று கேட்டார்! முருகப்பெருமான் உலக உயிர்க் கூட்டங்கள் அத்தனையுமாக நான் இருப்பதால் பூனையின் கன்னத்தில் ஏற்பட்ட கீறல் என் கன்னத்திலும் ஏற்பட்டது என்று அம்மையார் சொன்னர். மக்களிடம் ஏற்படும் குறைகளுக்கு அரசன் தண்டிக்கின்ருன். நான் செய்த இந்தக் குறைகளுக்கும் எத்தனை தடவை அடி வாங்கியிருக்க வேண்டும்.

கலைக்களஞ்சியம் திருத்தமாக அமைந்துவிட்டது என்று நினைக்கவேண்டாம். முதல் முயற்சியாகச் செய்திருக்கின்ருேம். அதை ஆக்குவதற்குத் தேவையான வசதிகள் இல்லை. நான்காவது பதிப்பாக வரும்போது புதிதாகவே வந்துவிடலாம். கலைக் களஞ்சியம் தமிழில்தான் வெளியிடப் பட்டிருக்கின்றது. இந்தியப் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு சென்னையில் ஐந்தாவது பதிப்பை வெளியிட்டுச் சென்றவர் அங்குச் சென்று இந்தி மொழியில் கலைக்களஞ்சியம் தயாரிப்பவர்களைப் பார்த்து "நீங்கள் எல்லாம் CHIEF-EDITOR (பிரதம ஆசிரியராக) இருப்பவர் யார்" என்று சண்டை செய்துகொண்டிருக்கின்றீர்கள். தமிழர்கள் எப்படிக் காரியங்களைச் செய்கின்ருர்கள் பாருங்கள் என்று பாராட்டிக் கூறினர்கள். அப்படிப் பாராட்டக் கூடிய தமிழ் கலைக் களஞ்சியத்தால் தமிழ் ஓங்கும்.

இந்தச் சிறப்பை எனக்குச் செய்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களுக்கு எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

MESSAGE FROM HIS HOLINESS KAILAI SUBRAMANYA DESIKA GNANA-SAMBANDA PARAMACHARYA SWAMIGAL OF DHARMAPURAM MUTT TO THE PRESIDENT OF INDIA.

A good government and a just rule are essential requirements for the mankind for leading a good life and achieving the benefits of life. In the ancient days the monarch was at the apex of the government and he evinced great anxiety in the welfare of the people and protected them even as a mother protects her child. Because of this the King was looked upon as a God and loved by the people. The glory and the responsibilities associated with the institution of kingship in ancient days now belong to the office of the President. Therefore the welfare of the people is now vested in the hands of the President.

His excellency Shri V. V. Giri, the President of India, has always spent his life for the welfare of the people. The great efforts taken by him for the welfare of the Labour Community is well known to the whole country. His services as Governor were great. It is in recognition of his selfless services that the country placed in his hands the great responsibility of the Presidentship of India. The people are aware that the welfare of the country is always in his mind.

It is therefore but natural that his birth day is celebrated in a befitting manner.

It is noteworthy that together with patriotism he has religious fervour also. It is gratifying to note that in rendering service to the country he is ably assisted by his wife and son.

May Lord Chokkanatha bestow on this distinguished and dedicated son of India longervity to enable him to continue to serve the Indian masses and the Republic of India.

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

"ஞானசம்பந்தம்" திங்களிதழ் முப்பது ஆண்டுகளாகச் சைவமும் தமிழும் பரப்பிவருவது உலகம் அறிந்தது. இது திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளி வருவது. சமயப்பொருள், இலக்கணம், இலக்கியம் முதலிய வற்றுடன் தெளிவான கட்டுரைகளை வெளியிட்டுவருவது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயன் பெறுக.

ஆண்டுச் சந்தா :-

உள்நாடு ரூ. 3—00, வெளிநாடு ரூ. 6—00,

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :

செயலாளர்
ஞானசம்பந்தம் காரியாலயம்,
தருமையாதீனம்
தருமபுரம், மாயூரம் P. O.

சிதம்பரத்தில்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் 3—9—'71 வெள்ளிக்கிழமை காலை சிதம்பரம் ஸ்ரீ நடராஜப்பெருமானைத் தரிசிக்க எழுந்தருளினர்கள். சிதம்பரம் அறப்பணிச்செல்வர், டாக்டர். திரு. K. அரங்கசாமிப் பிள்ளை அவர்கள் திருக்கோயிலுக்கு வந்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களைத் தமது, புதுமனை புகுவிழாவை முன்னிட்டுத் தமது இல்லத்திற்கு அழைத்துச்சென்றார்கள். அங்குப் பூர்ண கும்பம் வைத்து நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களை வரவேற்று, பாதபூஜை முதலியன செய்து பொன்னாடை போர்த்து கொலுவிலிருத்தி வழிபாடு செய்து மகிழ்ந்தார்கள். மேலும், டாக்டர் அவர்களும், சென்னை திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்களும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களுக்கு வரவேற்புரை ஒன்று வாசித்தளித்தார்கள். அரசர்களுக்குச்செய்யும் மரியாதைபோல துறவரசாகிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களை வரவேற்க, சிகப்புக் கம்பளத்தை நடை பாவாடையாக விரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஒன்பது வெள்ளி விளக்குகள் வைத்துப் பூஜை செய்யப் பெற்றது. ஸ்ரீ நடராசப்பெருமானின் திருவுருவத்தைப் பூஜை செய்து, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள், அறப்பணிச்செல்வருக்கு நடராசப் பெருமான் பூஜையை எழுந்தருளச் செய்து ஆசி வழங்கினார்கள்.

புதுமனை புகுவிழாவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் டாக்டர் அவர்களுக்கும், அவரது இளவலுக்கும், குமாரர்க்கும் பொன்னாடை போர்த்துச் சிறப்பித்தார்கள்.

சிதம்பரம் அறப்பணிச் செல்வர் டாக்டர். திரு. அரங்கசாமிப் பிள்ளையவர்கள் தமது புதுமனை புகுவிழாவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களை எழுந்தருளுவித்துக் கொலு வழிபாடு செய்து, "எனது வாழ்விற்கு அரும்பெருந் துணையாய் உள்ள குருமார் இருவர்; வித்தியாகுரு சென்னை டாக்டர். திரு. இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்கள். ஞானகுரு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள். இரு குருமார்களுமே இதுபோழ்து இங்கு வருகை

தந்து வாழ்த்தியருளுவது எனது தவப் பயன் என்றே நான் கருதி மகிழ்கின்றேன் என்றுகூறி, "தெளிவு குருவின் திருமேனி காண்டல், சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே" என்ற திருமந்திரங்களை எடுத்துக்காட்டி விளக்கம் தந்து வரவேற்புரை நிகழ்த்தினார்கள். அதில், "சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே" என்ற திருமந்திரத்திற்கு சூரியனுக்குப் பஞ்சைச் சுடும் தன்மை இருந்தபோதிலும் அது 'சூரிய காந்தம்' என்னும் ஒரு கண்ணாடியின் வழியாகவே நிகழ்வதுபோல, இறைவனுக்குப் பக்குவான்மாக்களுக்கு ஞானத்தைத் தரும் தன்மை இருந்த போதிலும் அது ஒரு ஞான குருவின் வழியாகத்தான் நிகழ வேண்டி உள்ளது' எனக் கூறிய விளக்கம் அனைவரது உள்ளங்களையும் தொடுவதாக அமைந்தது.

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ்சூழ் பஞ்சைச் சுடமாட்டா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்றம லங்களே.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே.

4—9—'71 அன்று மருத்துவப்பணி வெள்ளி விழாவை முன்னிட்டு இராமசாமிச் செட்டியார் உயர்பள்ளியில் நிகழ்ந்த பாராட்டுவிழாவில் வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் டாக்டர் அவர்களுக்கு ஆதீனச் சார்பில் பொன்னாடை போர்த்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் ஆசியை வாசித்தளித்தார்கள்.

5—9—'71 அன்று நிகழ்ந்த மருத்துவமனை வெள்ளி விழாவிற்கு, ஆதீனச்சார்பில் வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும் சென்றார்கள். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளாசியுரையை வாசித்து பொன்னாடை போர்த்துச் சிறப்பித்தார்கள்.

வாழ்த்து*

திருக்கயிலைப் பரம்பரையின் திருப்பெயரை
நிலைநாட்டத் திருவுள்ளத்தின்
பெருக்கிவரும் பேரன்பைத் தடுத்திடவே
இயலாமல் பேருழைப்பால்
தருக்குடனே தலைநிமிர்ந்து உயர்ந்தோங்கும்
இமயமலை தன்னைச்சார்ந்த
திருக்கயிலை தனைக்கண்டு பரம்பரையைக்
காத்திட்ட திறலோய் வாழி! 1

தருமத்தின் உறைவிடமாய் சைவத்தின்
காவலனுய்த் தரணி தன்னில்
உருவத்தில் அருவத்தில் அருவுருவத்
தெழில்தன்னில் ஒப்பில்லாத
திருவொத்த பேரிறைவன் மகிழ்ந்துறையும்
திருக்கோயில் இருபத்தேழும்
ஒருமித்தே உலகனைத்தும் உய்ந்திடவே
குடமுழுக்கைச் செய்தோய் வாழி! 2

யாம்பெற்ற இன்பத்தை இவ்வுலகம்
பெற்றிடுக என்றே யெண்ணி
தாம்கண்ட கயிலையினைத் தமிழகத்தில்
ஐயாறு முதலாயுள்ள
தோமறுநல் திருத்தலங்கள் திருக்கோயில்
தனைத்தூய்மை செய்ததோடு
தேமதுரத் தேவாரப் பண்ணிணையும்
இசைத்திடவே செய்தோய் வாழி! 3

தருமபுரப் பெரும்பீடத் தலைமையினை
யேற்றிட்ட கானூருண்டாய்
பெருமளவில் கல்விமுதல் பேரறங்கள்
செய்திட்ட பெரியோய் வாழி!
குருமணியே! கோதில்லாக் குணக்குன்றே!
யாம்செய்த தவத்தாலுன் றன்
திருவடியை எங்குடியில் பதித்திட்டீர்
யாம்வாழ்ந்தோம் செழித்து வாழ்க! 4

---

* தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் சிதம்பரம் கனகசபை நகருக்கு எழுந்தருளியபோது சிதம்பரம் டாக்டர். K. அரங்கசாமிப்பிள்ளை அவர்களும், டாக்டர் R. முத்துக்குமரன் அவர்களும், 3—9—71ல் வாசித்தளித்தது.

வாழ்த்துப்பாக்கள் *

பொன்னிதழிச் சடையான்றன் அருள்போலப்
பொதியில்மா மலையில் மேவி
மன்னிவளர் முனிவன்றன் உளம்போல
அவனுள்ளங் கவர்ந்து மன்னித்
தென்னன்வளர் தமிழ்போலக் குளிரவரு
தெளிபுனல்சேர் பொன்னிப் பாங்கர்
கன்னித்தமிழ்க் கலைவளர்க்கும் திருத்தருமை
ஆதீனம் வாழி வாழி. 1

தோடுமலி செவிமிளிரத் தூவெள்ளை
நீறணிந்து விடைமேல் தோன்றி
நாடறிய எடுத்தாண்டு ஞானப்பால்
தனையூட்டப் பெற்ற நாதன்,
தேடிமறை கண்டறியாச் செழும்பொருளைச்
சிறுவிரலால் தெரியக் காட்டிப்
பீடுயர்செந் தமிழ்ஞான சம்பந்தப்
பெருவாழ்வாய்ப் பிறங்கு நாதன். 2

ஒலிகடல்சூழ் உலகமெல்லாம் ஒருநெறியாய்ச்
சிவநெறியே ஓங்கும் வண்ணம்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் அண்ணலார்
தருமகவாய் அவத ரித்த
கலைமலிசீர்த் தமிழ்க்கூடல் கவின் சொக்க
நாதரையே கையில் பெற்ற
நலமலிசீர் குருஞான சம்பந்தர்
திருவடிகள் வாழ்க வாழ்க. 3

---

* சிதம்பரம் அறப்பணிச் செல்வர் டாக்டர் திரு. அரங்கசாமிப் பிள்ளை M. B. B. S., D. T. M. M H. (Liver) Z. M. R. (Vienna) அவர்களின் புதுமனை புகுவிழாவில் திருத்தருமையாதீனம் 25-வது குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளிக் கொலு வீற்றிருந்தபோது சென்னை ப. வடிவேல் பிள்ளை அவர்கள் 3—9—71 இல் வாசித்தளித்தது.

தங்குபுகழ்த் தமிழ்நாட்டில் சமயநெறி
பல்லாற்ருல் தளரும் இந்நாள்
பொங்குதிருக் குரவர்கடம் பொறுப்பிதுவென்
றுலகினர்க்குப் புகட்டு மாபோல்
எங்கெங்கும் எழுந்தரிய கோயிலொடு
சமயப்பற் றெழுப்பிக் காத்தே
மங்குநிலை போக்கிடுமா சந்நிதானத்
திருத்தொண்டு விரிக்கற் பாற்ரு ! 4

வருபிறவி தனையகற்றும் சிவபூசை
முதலாய மாண்புற் ருேங்கும்
திருமுறைபா ராயணஞ்செய் நியதிகடைப்
பிடித்தொழுகும் சிந்தை யாள !
பெருமிதங்கொள் கயிலையாத் திரைபலவும்
செய்துவக்கும் பெரிய ! யார்க்கும்
பெருமதுரைச் சொக்கநாதர் பூசையினைப்
பெரிதுவந்து செய்யும் தூயோய் ! 5

செந்தமிழும் வடமொழியும் சேர்ந்துபதி
பசுபாசம் என்னச் செப்பும்
முந்துபொருள் மூன்றுமே அநாதியெனும்
சித்தாந்த முடிபும் கண்டோய் !
நந்தலிலா ஆகமமும் நல்லதிரு
முறைகளையும் நனியு ணர்ந்தோய் !
இந்தமா நிலப்பரப்பில் எங்குமிலை
நின்போல்வார் வாய்மை யிதே. 6

அருள்படைத்த விழியுடையாய் ! அன்படைத்த
வுளமுடையாய் ! ஆக மாதி
தெருள்படைத்த மதியுடையாய் ! திறல்படைத்த
மனமுடை யாய் ! உலகில் தீய
மருள்படைத்தோர்க் கறிவூட்டும் வாக்குடையாய் !
எளியேனை வாழ்வித் தாண்ட
பொருள்படைத்த அருநிதியாம் சுப்ரமணிய
தேசிகனும் தலைவ ! வாழி. 7

என்னுயிருக் கின்னுயிரே எப்பொருளும்
நிறைந்தசென்னை மாநிலத்தில்
மன்னுமுயர் நீதிபதி முதல்யாரும்
போற்றிடுநன் மாண்பு வாய்ந்தோய் !

கன்னனையும் வென்றகொடைக் கரனுடையாய்!
வறியாரைக் காத்தாள் கின்ற
சொன்னமொழி தவருத சுப்ரமணிய
தேசிகனும் தலைவ! வாழி. 8

கற்ருருக் கிருநிதியே! கங்கைகுலத்
தனிவிளக்கே! கருணைக் குன்றே!
செற்ருருக் கும்இனியாய்! சேர்ந்தார்தம்
உயிர்த்துணையே! தேவ லோகத்
துற்ருரும் வரவிரும்பும் உயர்தருமை
ஆதீனத் தோங்குங் கோவே!
நற்ருய்நேர் அன்புருவாம் சுப்ரமணிய
தேசிகனும் தலைவ! வாழி. 9

தேவாதி தேவனெனும் பரமனருட் குவந்த
பெருஞ் செல்வம் நல்கும்
தேவாரத் திருப்புகழா தியஅருளின்
பாக்களினைத் திருத்த மாக
நாவார வேபாடி யினியமனங்
கனியவரும் நயமிக் கார்ந்த
தேவால யத்தலைமை சுப்ரமணிய
தேசிகனும் தலைவ! வாழி 10

எத்தனையோ அறச்செயல்கள், எத்தனையோ
திருப்பணிகள், எண்ணி லாவாம்
எத்தனையோ அர்ச்சனைகள், எத்தனையோ
நற்செயல்கள், இயம்ப லாற்ரு
எத்தனையோ தீர்த்தவகை, எத்தனையோ
தானங்கள், ஏழைக் கான
எத்தனையோ செய்துமகிழ் சுப்ரமணிய
தேசிகனும் தலைவ! வாழி. 11

வாழிவளர் திருத்தருமை, வாழியருள்
ஆதீனம், வளமிக் கோங்கி
வாழியநல் லறப்பணிகள்; வாழியசீர்த்
திருக்கோயில்; வாழி வாழி
வாழியவர்க் கன்புடைய அறப்பணியின்
செல்வரெனும் அரங்கசாமி,
வாழியருட் குருஞான சம்பந்தர்
திருமரபு வாழி வாழி. 12

செய்திகள்

தருமையாதீனச் சார்பில்

ஜனாதிபதி மேதகு. வி. வி. கிரி அவர்களுக்குப் பிறந்தநாள் பாராட்டு

பாரதத்தின் முதற்பெருந் தலைவராக விளங்கும், மேதகு வி. வி. கிரி அவர்களின் 77ஆவது பிறந்த நாளையொட்டி தருமையாதீனச் சார்பில் பாராட்டிப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

நம் ஆதீன அன்பர் திரு. எம். எஸ்பி. சண்முகம் எம். ஏ., அவர்கள் ஓதுவார் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்களுடன் ஆதீனச் சார்பில் 11—8—71 அன்று ராஷ்டிரபதி பவனம் சென்று, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அனுப்பியிருந்த பொன்னாடையைப் போர்த்தி, மாலை அணிவித்து, பிரசாதங்களை ஜனாதிபதி அவர்களிடம் சேர்ப்பித்தார். ஓதுவா மூர்த்திகள் தேவாரத் திருமுறைகளைப் பாட எழுந்துநின்று இருகரங்கூப்பிப் பிரசாதங்களைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி அவர்கள் "மகா சந்நிதானம் அவர்களுக்கு எங்கள் வணக்கங்களைச் சொல்லுங்கள்; அவர்கள் ஆசி எங்களுக்கு எப்போதும் வேண்டும்" என்று பன்முறையும் கூறினார்கள். பின்னர், திரு. சண்முகம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் தமிழில் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஜனாதிபதி முன்னிலையில் படித்தளித்தார்கள்.

தருமையாதீனத்தில்

ஆவணிமூலத் திருநாள்

"அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்செய்யும் அன்னையவள்
தரும்பிட்டுப் பிட்டுண்டு தலையன்பிற் கட்டுண்டு"

நின்ற ஆலவாய் அண்ணல், மணிவாசகப்பெருமான் பொருட்டு 'மண்சுமந்து, கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு, புண்சுமந்த' அற்புதத்தை விளக்கும் ஆவணிமூலத் திருநாள் வழக்கம்போலத் தருமையாதீனத் திருமடத்தில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. தருமையும், கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராய் அரசு வீற்றிருக்கும் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாக விளங்கும்

ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குப் பத்து நாட்கள் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது.

31—8—71 செவ்வாய்க்கிழமை ஆவணிமூல நாளன்று காலையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து சிறப்பு வழிபாடு நிகழ்த்தினர்கள். விழாமலராக 'திருவாலவாய்த் தோத்திரத்திரட்டு' என்னும் நூல் வெளியிட்டு வழங்கப்பெற்றது. மதியம் மாகேசுவர பூஜை நிகழ்வுற்றது.

இவ்விழாவின் பின், மூன்று நாட்கள் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில், முடியுடை மூவேந்தர் திருநாளும், தருமையாதீன அருளாட்சியில் தழைத்து வரும் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும் நிகழ்வுற்றன.

29—8—71 ஞாயிறு முதல் மூன்று நாட்களுக்கு முறையே சேர, சோழ, பாண்டியர் திருநாள் கொண்டாடப்பெற்றது. மூவேந்தர் காலத்தே வளர்ச்சியுற்ற இலக்கியம், கலை, சமயம் பற்றிய விரிவுரைகளை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்களும், மற்றும் பெருமக்கள் பலரும் நிகழ்த்திச் சிறப்பித்தனர்.

வேத சிவாகம பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி, தேவாரப் பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப் பள்ளி, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் கனகாபிஷேக நினைவு சைவ - சித்தாந்தக் கல்லூரி, ஆதீனப் பல்கலைக் கல்லூரி ஆகிய ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டறிக்கைகளை அவ்வவ் நிறுவனத்தின் தலைமையாசிரியர்களும், முதல்வரும் படித்தனர். மாணவ - மாணவியர் பங்குபற்றிய கலை நிகழ்ச்சிகளும் நாடொறும் நடைபெற்றன.

31–8–71 மாலை 7 மணிக்கு திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில்பட்டமளிப்பு விழா தொடங்கியது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் எழுந்தருளி ஆவணிமூல நன்னளில் ஆலவாய்ச் சொக்கன் நிகழ்த்திய அருளாடல்களை வியந்து அருளுரை வழங்கி அன்பர்களுக்கு ஆசி கூறி, 'கலைக்களஞ்சிய' வெளியீட்டின் 'பிரதம ஆசிரிய'ராகப் பொறுப்பேற்று அரும்பணியாற்றிய சென்னை, திரு. ம. ப. பெரியசாமி தூரன் அவர்களுக்குப் பொன்னடை போர்த்து "செந்தமிழ்க் கலைச்செல்வர்" என்ற சிறப்புப்பட்டம் வழங்கி ஆசியருளினர்கள்.

தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தியபின்னர். ஆதீனப் பல்கலைக்கல்லூரிப் பொறுப்புமுதல்வர், திருநெறிச்செம்மல் திரு. வி. சா. குருசாமி

தேசிகர் அவர்கள் கல்வி நிலையங்களின் ஆண்டறிக்கைகளையும், வாழ்த்துச்செய்திகளையும் படித்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் கல்வி நிலையங்களில் கடந்த ஆண்டில் சிறக்கக்கற்றுச் சிறந்த மாணவ மாணவியர் கட்குப் பரிசுகள் வழங்கி அருளினர்கள்.

விழாவில் சென்னை திருவாட்டி சவுந்தரா கைலாசம் அவர் களும் பங்கேற்றுத் திரு. பெரியசாமி தூரன் அவர்களைப் பாராட்டி 'கவிமலர்' ஒன்றைப் படித்தளித்தார்கள்.

கடந்த ஆவணிமூல விழாவிற் பட்டம்பெற்ற செந்தமிழ் இலக்கியச்செம்மல் டாக்டர். திரு. ந. சஞ்சீவி அவர்கள் பட்டம் பெற்ற பெரியாரைப் பாராட்டி, பாண்டியர் காலக் கலை இலக்கிய வளர்ச்சிகள் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினர்கள்.

திரு. தூரன் அவர்களின் திருமகளார், தம் தந்தையாரால் புனையப்பெற்ற சில பக்திப்பாடல்களை இசையொடு பாடி மகிழ் வித்தார்கள்.

பட்டம்பெற்ற திரு. தூரன் அவர்கள் தக்கவிதம் நன்றி தெரிவித்துக்கொண்டு உரை நிகழ்த்தினர்கள்.

தாம் எழுதி வெளியிட்ட கவிதை நூல்கள் சிலவற்றை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருமுன்னிலைக்கு அன்புடன் சமர்ப்பித்தார்கள்.

இறுதியில் சென்னை, தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றிகூற இரவு 10-15 மணி அளவில் விழா நிகழ்ச்சிகள் யாவும் இனிதே நிறைவுற்றன.

கல்விநிலைய மாணவ - மாணவியர்களும், நகரப் பெரு மக்களும் திரளாகக் கூடியிருந்து விழாப் பயன் கண்டனர்.

புள்ளிருக்கு வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

வைத்தீஸ்வரன் கோயில் கிருத்திகை விழா 15–8—71 ஞாயிறன்று வெகுசிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக் குமாரசுவாமிக்கு நடைபெற்ற அபிஷேக சந்தனக் குழம்புப் பிரசாதமும், அர்ச்சனைப் பிரசாதமும் 16—8—71 மாலை7 மணிக்கு சென்னை சமயப்பிரசார நிலையத்தில் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கும் பிரசாதம் பெறும் உறுப்பினர்கட்கும் வழங்கப்

பட்டன. திரு. சு. ஞானப்பிரகாசமும், வித்துவான். திரு. ந. இராமலிங்கமும் வேளூர்த் தேவாரம், திருப்புகழ்ப் பாராயணம் நிகழ்த்தினர். "தமிழரசு" பத்திரிக்கையின் உதவி ஆசிரியர் திரு. B. சொக்கலிங்கம் விழாவிற்குத் தலைமை வகித்து வைத்தீஸ்வரன் கோயில் சிறப்புப் பற்றி விளக்கிப் பேசினார்கள்.

ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா சிவஞானசித்தியார் வகுப்புத் தொடக்க விழா

சென்னை தருமபுர ஆதீன பிரசார நிலையத்தில் (23—8—71) ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா, சிவஞானசித்தியார் வகுப்புத் தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

காலையில் ஸ்ரீ மறைஞானசம்பந்தர் வழிபாடும், வித்துவான் திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்களால் புராண விரிவுரையும் நிகழ்த்தப்பட்டது. மாலையில் சிவஞானசித்தியார் வகுப்புத் தொடக்க விழா சென்னை இந்து சமய அறநிலையத் துணை ஆணையர் திரு. ஏ. வேங்கடாசலம், பி. எஸ். ஸி., பி. எல். அவர்கள் தலைமையில், சென்னை திரு, Dr. P. நடராஜன் M. A. D. Lit., அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. திருக்கோயில் ஆசிரியர் திரு. என். ஆர். முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்., அவர்கள் சிவஞானசித்தியார் வகுப்பு நடத்தினார்கள்.

தவத்திரு. சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறும்போது அன்புநெறியை வளப்படுத்துவது தோத்திரமாகிய பன்னிரு திருமுறைகள் என்றும் அறிவு நெறியை வளப்படுத்துவது பதினன்கு சித்தாந்த சாத்திரங்கள் என்றும் கூறி நன்றி நவின்றார்கள்.

சென்னை திருவேட்டீஸ்வரர் ஆலயத்தில் மாதவழிபாடு

சென்னை சமயப் பிரசார நிலைய மன்றத்தின் 149வது மாத வழிபாடும் சமயப் பிரசாரமும் சென்னை, திருவேட்டீஸ்வரன் பேட்டை ஸ்ரீ திருவேட்டீஸ்வரர் ஆலயத்தில் சுவாமி அம்பாளுக்குக் குழுவினரின் விசேஷ அபிஷேக ஆராதனையுடன் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டுக் காலத்தில் வித்துவான் திரு. ந. இராமலிங்கம், சங்கீதமும், திருப்புகழும் ஓதி மகிழ்வித்தார்.

ஆலய மண்டபத்தில் சென்னை இந்து சமய அறநிலையத் துணை ஆணையர் திரு. ஏ. வேங்கடாசலம் பி. எஸ். ஸி. பி. எல். அவர்கள் தலைமையில் சமயப்பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் இறைவழிபாடு சமயப்பிரசாரத்தின் நோக்கம் பற்றி விரிவுரையாற்றினர்கள். கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் "அப்பர் தேவாரத்தில் விநாயகர்" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினர்கள்.

ஆலயத்தின் சார்பாக திரு. கே. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

விநாயக சதுர்த்தி விழா

சென்னை தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் (24—8—71) விநாயக சதுர்த்தி விழாவும், தமிழ் வித்துவான் வகுப்பு பழைய மாணவர் கழகத் தொடக்க விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

சைவ சித்தாந்த மகா சமாசத் தலைவர் திரு. கீ. இராமலிங்கனர் தமது தலைமையுரையில் நமது தமிழ் மக்களுக்கு ஆவணி மாதத்திலிருந்துதான் எல்லா விழாக்களும் தொடங்குகின்றன என்றும் ஆவணி மாதமே தமிழ் மக்களுக்கு ஆண்டில் முதலாவது திங்களாக இருந்திருக்க வேண்டும் என்றும், விநாயகரையே, நாம் எல்லாவித சடங்குகளுக்கும் முதன்மையாக வைத்து வணங்கிக் கொண்டாடுகிறோம். அதே போன்று விநாயக சதுர்த்தி விழா மாதமாகிய ஆவணி மாதத்திலிருந்துதான் நமது பண்டிகைகள் எல்லாம் தொடர்ந்து வருகின்றன என்றும் ஆவணியே பழங்காலத்தில் தமிழ் ஆண்டுத் தொடக்கமாக இருக்கக்கூடும் என்றும் கூறினர். இந்த நிலையத்தின் தமிழ் வித்துவான் வகுப்பு பழைய மாணவர் கழகத் துவக்கவிழாவும் இந்த முதன்மையான திருநாளிலே அமைந்தது இறைவன் திருவருள் என்றும் கூறினர்கள். பழைய மாணவர் கழகத்தை வித்துவான். திரு. ப. வடிவேல் பிள்ளை தொடங்கி வைத்தார். பழைய மாணவர் கழகத்தின் சார்பாக வித்துவான். திரு. மா. க. காமாட்சிநாதன் (பழைய மாணவர்) "தமிழ் இலக்கியச் சிறப்பு" என்ற தலைப்பில் திருக்குறள் திருமுருகாற்றுப்படை இவைகளில் உள்ள சொல் நயம் பற்றி சுமார் ஒரு மணி நேரத்திற்குமேல் சுவைபடச் சொற்பொழிவு ஆற்றினர். தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினர்கள்.

விழா முடிவில் சென்னை செல்வி. என். உமாசரஸ்வதி குழுவினர் விநாயகர் சிறப்பும், காரைக்கால் அம்மையார் சரித்திரமும் என்பது பற்றி பக்க வாத்தியங்களுடன் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

(விரோதிகிருது௵ புரட்டாசிமீ 1உ முதல் 31உ முடிய)
(17—9—71 முதல் 17—10—71 முடிய)

புரட்டாசிமீ 1ந்தேதி உதையாதி 19 நாழி 33 விநடிக்குதனுர் லக்னத்தில் ஸ்ரீ லோக ரக்ஷகரான சூரிய பகவான் கன்னி ரவி பிரவேசம் செய்கிறார். பகல் வேளையாகவும் மூன்ருவது யாமமும் அமைந்திருக்கிறது. தனுசுக்கு 2, 6, 8, 12ல் செவ்வாய் ராகுவும், 6 இல் சனியும், 8 இல் கேதுவும், 12 இல் குருவும், சஞ்சாரம் செய்கின்ருர்கள். செவ்வாயும் வக்ரம், ஷ தினம் கலியுகம் பிறந்த தினமும்ஆகும். ஷ பலன்கள் எழுத மனம் சமாதானப்படவில்லே. மனுஷ்யதேவர்களாய், அவதார புருஷர்களாய்த் தோன்றக் கூடிய இஹலோக சஞ்சார தேவர்களாய்ப் பல அற்புதங்கள் தோன்றும். பல இடங்களில் வியவசாய காரியங்கள் தவக்கப் படும். அங்காரக பூமியில் மாத்திரம் முதல் போகம் தானிய விருத்தி அளவுக்கு மிஞ்சி இருக்கும். பலதேசங்களில் இயற்கைக் கோளாறுகளாலும், யுத்த மேகத்தாலும் சூழப்பட்டு பயத்தைத் தரும். தர்ம பூமிகள் புண்ணிய பூமிகள் காப்பாற்றப்படும். ஒவ்வொருவரும் கடவுளேயே நம்பிக் கடமையைச்செய்ய சுபமுண்டாகும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனேத் தரும். அடிக்கடி புண்ணிய க்ஷேத்திர சஞ்சாரங்களும் தெய்வ காரியங்களும் நடந்துகொண்டு இருக்கும். விசேஷமாக லாபமும் விசேஷமாக செலவுகளும் உண்டாகும் நஷ்டமான பொருள் தானுக வந்து சேரும். ஜீவனம் ஓங்கும், உறவினர்களாலும் சிநேகிதர்களாலும் நன்மை உண்டாகும். வெள்ளி சனி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனேத் தரும். புதிதான தொழில் மூலம் தூரதேச சஞ்சாரமும் ஏற்படும்.

மேலோர்களுக்கு ரிஷபராசிக்காரர்களுக்கு அப்பிரியம் உண்டாகும். பழைய பழக்க வழக்கங்கள் எல்லாம் மாறுதல் அடையும். புதிதான பிரபு தெரிசனமும் சுகஜீவனமும் உண்டாகும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத் தரும். தூரதேசத்திலிருந்து அழைப்புப்பத்திரம் வந்து சேரும், ஸ்திரமான ஜீவனம் ஏற்படும், படிப்பு விருத்தியாகும், கீர்த்தி உண்டாகும், தீராத வியாதி தீரும், மேலோர் பெரியார் அன்பு கிடைக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். அழைப்புப் பத்திரம் கிடைக்கும். எதிர்பாராத ஸ்திரமான நன்மையைக் கொடுக்கக்கூடிய சில அற்புதமான காரியங்கள் சாத்தியமாகும். குடும்பம் ஓங்கும். சுப சோபனுதிகள் உண்டாகிக்கொண்டிருக்கும் வியாழன் வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.

சிம்மராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். புதிதாக பிரபுக்களுடைய தெரிசனமும் ஜீவனத்தில் பல மாறுதல்களுடன் மேல்பதவியும் மேலோர் பெரியோர்களின் அன்பும் கிடைக்கும். வரவுசெலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும், எப்பொழுதும் மனம் நிம்மதி இல்லாமல் இருந்துகொண்டு இருக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். அடிக்கடி சஞ்சாரம்ஏற்பட்டுக் கொண்டிருக்கும். புதிதானதொழில் மூலம் ஜீவனம் விருத்தியாகும், கீர்த்தி உண்டாகும், வியாதி நீங்கும், தெய்வசக்தி முன்னின்று காக்கும். கிரய விக்கிரயங்களில் அதிகமான லாபம் உண்டாகும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

7, துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத் தரும். உலகில்காணுத பலஅற்புதங்களைச் செய்யும்படி நேரிடும். வியாதி

சாந்தியாகும். நஷ்டமான பொருள் தானுக வந்துசேரும் தர்ம காரியங்களாலேயே காலம் நடந்துகொண்டிருக்கும். தெய்வ பலமும் முன்னின்று காக்கும். புதன் வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். தொழில் காரணமாக இடம் மாறும். ஆரோக்கியம் உண்டாகும். வம்ச விருத்தியாகும். செலவுகள் அதிகமாகும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். அதிக செலவுகளால் சிரமம் ஏற்பட்டாலும் பின்பு எல்லாம் நன்மையாக முடியும். வெள்ளி, சனி சுபமாகும்.

9 தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$.

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். வெகு நாளாக நடைபெருத காரியங்கள் சுலபமாக நடைபெறும். தீராத வியாதியும் கவலையும் தீரும். மனம் நிம்மதி இல்லாமல் இருந்து கொண்டு இருக்கும். தெய்வபலம் முன்னின்று காக்கும்.

10. மகரம்– உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத் தரும். ஜீவனம் விருத்தியாகும். உத்தியோகத்தில் மேல் பதவி கிடைக்கும். வியாதி நிவர்த்தியாகும். கீர்த்தி உண்டாகும். தலைமை வகிக்கும் தன்மை ஏற்படும். தெய்வபலம் காக்கும். சுபம் உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்

11. கும்பம் – அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் – பூரட்டாதி $\frac{3}{4}$,

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். குடும்பத் தொல்லைகள் ஏற்படும் தீராத கடன் தீரும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். ஸ்தாவர ஜெங்கம சொத்துக்கள் சேரும். தொழில் ஓங்கும். வியவகாரம் ஜெயிக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத் தரும். தெய்வவழிபாடும் ஸ்தலயாத்திரைகளும், அநேக பெரியார்களுடைய அன்பும், ஞானவிருத்தியும், உலகப்ரசித்தியும் உண்டு பண்ணும். எப்பொழுதும் தெய்வபலத் தோற்றமாகவே இருக்கும் இல்லறசுகம் அதிகமாகும். சனி ஞயிறு சுபமாகும்.

சுபம்.

தருமையாதீனம் வேளூர் தேவஸ்தானம்
இலவச சித்த வைத்திய சாலை

மூத்திரேந்திரிய ரோகங்கள்

(Diseases of the Urinary Organs)

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

உண்டாகின்ற உலகில் மானிடர்களுக்கு இயற்கையிலேயே ரோகங்கள் சில. தானே வரவழைத்துக் கொள்ளுகின்ற ரோகங்கள் பல. அவற்றில் மூத்திர ரோகங்களும் ஒன்றாகும். நீர் அடைப்பு, நீர் கட்டு (Retention of Urine) நீர் சுருக்கு, நீர் ஒழுக்கு இவ்வாறு பலவித ரோகங்கள் உண்டாகின்றன. மூத்திரப் பையிலுள்ள நீரானது வெளிப்படாமல் அடைபட்டுப் போகின்ற நோய்க்கு நீர் அடைப்பு என அழைக்கின்றார்கள். மூத்திரம் குண்டிக்காயிலிருந்து (Kidneys) சுரக்காமல் நீர் அடைபடுவதும் உண்டு. ஆனால் அவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்டறிந்து வைத்தியம் செய்வதுதான் வைத்தியர்களின் கடமை.

நீர்ச் சுருக்கு சாதாரணமாக அதிக உஷ்ணத்தினால் ஏற்படுவது. நீர் ஒழுக்கும் மூத்திரப்பையிலுள்ள வால்வு சரியாக இயங்காத காரணத்தால் சதா நீர் கொட்டிக்கொண்டே இருக்கும். நீர் அடைப்பை இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். நீர்த் தாரையில் உண்டாகும் ஜவ்வு சுருங்கிவிடுவதால் மூத்திரம் வெளிவராமல் தடைபடும். மற்றது நீர்த்தாரையில் துர் மாமிசம் வளர்ந்து அடைத்துக் கொள்வதால் மூத்திர அடைப்பு ஏற்படும்.

பிரமேகம் ஏற்படுவதாலும், துர்மாமிச அடைப்பு (Spasmodic Stricture) உண்டாவதாலும் மூத்திரத்தில் பலவித தோஷங்கள் ஏற்படுவதாலும் இந்த நோய் ஏற்படுகிறது. மதுபானம் அதிகம் அருந்துவதாலும் அதிகம் குளிர்ச்சியும் ஈரமும் உள்ள இடங்களில் சஞ்சரித்துக்கொண்டிருப்பதாலும் மூத்திர அடைப்பு ஏற்படுகின்றது. இரவில் அதிகம் பாதிக்கும்.

நீர் அடைப்புக்கு அறிகுறிகள் :

அடிக்கடி முக்கி நீர்ப் பிரிவதற்குப் பிரயத்தனம் செய்தாலும் நீர் வெளிப்படாது. அதிகக் கஷ்டத்தை கொடுக்கும். அதனால்

மூத்திரப் பையில் அதிக நீர் சுரந்து வயிற்றில் உப்புசம் காணப் படும். அப்போது அடிவயிற்றை மெதுவாக அமுக்கிப் பார்த் தால் உருண்ட கட்டிபோல் விரல்களுக்குத் தென்படும். நீர்த் தாரையில் சுருக்கம் கொஞ்சம் தளர்ந்தபோதெல்லாம் துளித் துளியாக நீர் வெளிப்படும். அப்போது அதிக வலியும் உண்டா கும். முகம் அதிக ஏக்கத்துடன் காணப்படும். நாடித்துடிப்பும் அதிகமாகும். சரீரம் படிப்படியாக உஷ்ணம் அதிகரித்துக் கொண்டே போகும். அதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்யாவிட்டால் மூத்திரப்பை உள்ளேயே வெடித்து மற்ற உறுப்புக்களில் பரவி உடனே துர் மரணத்தை உண்டாக்கும்.

சிகிச்சை :

உபத்திரவம் அதிகம் இல்லாமலும் குளிர்ச்சியினல் ஏற்பட் டதுவும் சதை அடைப்பு இல்லாமல் இருந்தால் வியாதியஸ்தரை இடுப்பு வரையில் வெந்நீரில் உட்கார வைத்து,விடாமல் ஒற்றட மும் கொடுத்துவர வேண்டியது. கொஞ்சம் விளக்கெண்ணை கொடுத்து மலத்தைக் கழிப்பதாலும் கொஞ்சம் சாந்தம் ஏற்படும். அபினியும் சில சமயம் உபயோகிப்பது நல்லது. வெங்காரம் 10 gm வாங்கி அதை ஒரு சட்டியில் விட்டு நன்ருகப் பொரித்து அதில் 1 படி தண்ணீர் விட்டு ¼ படியாகச் சுண்டவைத்து வேளைக்கு ½ அவுன்ஸ் விதம், கடலிலிருந்து கிடைக்கக்கூடிய கல்நண்டு என்னும் கல்லைக் சந்தனக் கல்லில் இழைத்து அந்தச் கஷாயத்துடன் சேர்த்துச் சாப்பிட்டால் நீர் அடைப்பு உடனே நீங்கிவிடும். கல்நண்டு கடையில் கிடைக்கும். ஆங்கில வைத்தி யத்தில் சிலர்க்கு (Cathetar) இட்டு நீரை வெளிப்படுத்துவார்கள்.

வெங்காய சார் 2 அவுன்ஸ் எடுத்து அதில் மேற்படி வெங் கார கஷாயம் 2 அவுன்ஸ் சேர்த்துச் சாப்பிட்டாலும் நீர் அதிகம் பிரியும்.

இளநீரில் கொஞ்சம் ஜீரகத்தை அரைத்துப் போட்டு கலக்கி மேற்படி வெங்கார கஷாயம் ½ அவுன்ஸ் கலக்கி காலை மாலை சாப்பிட்டாலும் நீர் அடைப்பு தீரும்.

கீழா நெல்லி, சங்கன் இலை, வெங்காயம், பச்சை நெல் உமி இவைகளைச் சமஎடை எடுத்து இடித்து சார் பிழிந்து நாள் ஒன்றுக்கு ¼ படி சார் கொடுக்க உடனே நீர் அடைப்புத் தீரும்.

(தொடரும்)